# அஃழ்ழாஹ்வுக்கு இருக்க வேண்டிய பதின்மூன்று பண்புகளின் விளக்கவுரை

| | |
|---|---|
| **நூலின் பெயர்** | *:அழ்ழாஹ்வுக்கு இருக்க வேண்டிய பதின்மூன்று பண்புகளின் விளக்கவுரை* |
| **நூலாசிரியர் பெயர்** | *:அல்-அல்லாமதுல் முதபன்னின் அப்துழ்ழாஹ் அல்-ஹறரி றஹிமஹுழ்ழாஹ்* |
| **தமிழாக்கம்** | *:இமாம் அல்-அஷ்அரீ கலாபீடம் - கொழும்பு, அல்-ஹிதாயா அரபிக் காலபீடம் – காத்தான்குடி.* |
| **பதிப்பு** | *:முதலாவது* |
| **ஆண்டு** | *:ஹிஜ்ரீ 1442 ஜுமாதல் ஆகிரஹ் -கி.பி. 2021 ஜனவரி* |
| **பக்கங்கள்** | *: 88* |
| **பிரதிகள்** | *: 5000* |
| **வெளியீட்டு எண்** | *: 09* |
| **வெளியீடு** | *:இமாம் அல்-அஷ்அரீ கலாபீடம் - கொழும்பு, அல்-ஹிதாயா அரபிக் காலபீடம் – காத்தான்குடி.* |
| **தொடர்புகளுக்கு** | *: 077 077 9406 – 077 232 8686* |

## முன்னுரை

புகழ்கள் யாவும் படைப்புகள் அனைத்தையும் இல்லாமையிலிருந்து படைத்து, அவற்றிற்கு எவ்விதத்திலும் ஒப்பாகாத, உடலற்ற, உருமற்ற அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டுமாக!. மேலும் அதிக சிறப்புகளையும், தன் உம்மத்தின் மீது முஹம்மத் ﷺ அவர்கள் எதையெல்லாம் பயப்படுவார்களோ அது அனைத்தை விட்டும் அச்சமின்மையையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

அல்லாஹு தஆலா தன் அடியார்கள் மீது பல கடமைகளை விதித்துள்ளான். அவற்றை அறிந்து, முறையாக நிறைவேற்றுவது அடியார்களின் கடமையாகும்.

அல்லாஹ் விதித்த கடமைகளில் முதன்மையானதும், முக்கியமானதுமான கடமை யாதெனில், அல்லாஹ்வையும் அவன் தூதரையும் சரியாக அறிந்து ஈமான் கொள்வதாகும். அதையே இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள்

أول ما يجب على العبد العلم بالله ورسوله ودينه

‘‘அடியாான் மீது கடமையாகும் முதல் விடயமானது அல்லாஹ்வையும், அவன் தூதரையும், அவன் மார்க்கத்தையும் அறிவதாகும்’’ என்று அடியார் மீதான முதற்கடமை பற்றி கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வை சரியாக நாம் அறிய நமக்கு காட்டித் தரப்பட்ட ஒரே வழி அவன் ஸிபாத்களை (பண்புகளை) அறிவதேயாகும். அவனது பரிசுத்த பண்புகளை ஒருவன் அறிவதன் மூலமே அவன் அல்லாஹ்வை அறிய முடியுமே தவிர வேறில்லை. குர்ஆனிலும், ஸஹீஹான ஹதீஸ்களிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ள அல்லாஹ்வின் பண்புகளில்

பதின்மூன்று பண்புகள் அல்லாஹ்வுக்கு இன்றியமையாத பண்புகள் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இப்பதின்மூன்று பண்புகளையும் அறிவது முஃமினான ஆண், பெண் அனைவர் மீதும் கடமையாகும். இப்பதின்மூன்று பண்புகளையும் அறியாதவர் ‘‘பாசிக்’’ குற்றம்புரிந்த முஃமினாக கருதப்படுவார். இதற்காக அவர் கியாமத் நாளில் தண்டிக்கப்படவும் வாய்ப்புண்டு.

அல்லாஹ்வுக்கு இருக்கவேண்டிய பதின்மூன்று பண்புகள் பற்றி பல அறிஞர்கள் பல தொகுப்புகளை வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு றஹ்மத் செய்வானாக! அந்த வகையில் ஷாம் தேசத்து ஹதீஸ்கலை அறிஞர் இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் தொகுத்த ‘‘ஷர்ஹுஸ் ஸிபாதிஸ் ஸலாஸத அஷ்ரதல் வாஜிபத லில்லாஹி தஆலா’’ என்ற நூலானது அல்லாஹ்வின் பண்புகள் பற்றிய முழுமையான தெளிவை முன்வைப்பதுடன், அவற்றுக்கான அறிவிப்பு மற்றும் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களையும் கொண்டுள்ளது. மேலும் அல்லாஹ்வின் பண்புகள் தொடர்பாக பித்அத்வாதிகளின் பிழையான கோட்பாடுகளுக்கு அஹ்லுஸ்ஸுன்னஹ்கள் வழங்கும் தகுந்த மறுப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.

எல்லாத்தரத்திலுள்ளவர்களும் கட்டாயம் அறிந்து கொள்ளும் பொருட்டு இந்நூல் தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பெறுமதிமிக்க நூலைத்தந்த நூலாசிரியருக்கும், இது தமிழில் வெளிவர உழைத்த அனைவருக்கும் அல்லாஹ் றஹ்மத் செய்வதோடு, இதை வாசிக்கும் அனைவருக்கும் ஈமானின் யதார்த்தத்தை கிடைக்கச் செய்வானாக! ஆமீன்

# இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

**அவர்களின் பிறப்பு:**

*இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் "ஹபஷா" (எதியோப்பியா)வில் "ஹறர்" எனும் ஊரில் ஹிஜ்ரீ 1327, கி.பி. 1910ல் பிறந்தார்கள்.*

*இவர் தனது பத்தாவது வயதை அண்மிக்கும் முன்னரே புனித குர்ஆனை மனனமிட்டார்கள். தன் சிறு வயதிலிருந்தே விளையாடுவது போன்ற விடயங்களில் தன் கவனத்தைச் செலுத்தாது, குர்ஆன் ஓதல் மற்றும் நூல்கள் வாசித்தல் போன்ற விடயங்களில் தன் நேரங்களைக் கழித்து வந்தார்கள்.*

*இமாம் அப்துல்லாஹ் அல்-ஹழ்றமி என்ற ஷாபிஈ மத்ஹபில் பிரபல்யமிக்க அறிஞரின் "அல்-முகத்திமதுல் ஹழ்ரமிய்யஹ்"* (المقدمة الحضرمية) *மற்றும் (* المختصر الصغير فيما لا بد لكل مسلم من معرفته*) "அல்-முஹ்தஸர்ஸ் ஸஹீர் பீமா லா புத்த லி குல்லி முஸ்லிமின் மின் மஃரிபதிஹி" ஆகிய நூற்களை அவரது தந்தை சிறுவயதிலேயே அவருக்கு கற்றுக் கொடுத்தார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!*

*பின்னர் இமாமவர்களுக்கு கல்வி கற்பதில் ஆர்வம் ஏற்பட்டது. தன் ஊர் மற்றும் அதனை அண்டிய ஊர்களிலுள்ள ஆலிம்களிடம் சென்று படிக்கலானார்கள். எனினும் ஹதீஸ் துறை சார்ந்த கல்வியிலேயே இமாமவர்கள் அதிக கவனம் செலுத்தி, (*الصحاح الستة*)*

*“ஸிஹாஹுஸ் ஸித்தஹ்” என்றழைக்கப்படும் ஆறு கிரந்தங்களையும் இன்னும் இவையல்லாத வேறு சில ஹதீஸ் கிரந்தங்களையும் இஸ்னாதுடன் (அறிவிப்பாளர் வரிசையுடன்) மனனம் செய்தார்கள்.*

*இமாமவர்கள் தனது பதினெட்டாவது வயதை அடைய முன்னரே ஹதீஸை ரிவாயத் செய்யவும், பத்வா வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டார்கள்.*

*கிதாப்களை விளங்குவதிலும், மனனமிடுவதிலும், ஹதீஸ் கலை மற்றும் அறபு மொழி, குர்ஆன் விரிவுரை, வாரிசுரிமைச் சட்டம் போன்ற அனைத்திலும் “ஹபஷா”, “சோமாலியா” போன்ற பகுதிகளில் அவர்களது தரத்தையுடைவர்களில் சிறந்து விளங்கினார்கள். இஸ்லாமிய எந்தவொரு கலையையும் விட்டு வைக்கவில்லை என்று கூறும் அளவு அனைத்துக் கலையிலும் பாண்டித்தியம் பெற்றார்கள்.*

**அவர்களுடைய குணாதிசயங்கள்:**

*இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் மிகவும் பேணுதல் மிக்கவராகக் காணப்பட்டார்கள். உபதேசம் செய்ய முன்னரே தன்னடத்தையால் மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்தார்கள். மற்றும் சிறியவர்களுடனும், பெரியவர்களுடனும் பணிவாக நடந்து கொண்டார்கள்.*

*திக்ர், தொழுகை மற்றும் ஏனைய வணக்க வழிபாடுகளில் அதிகமாக ஈடுபடக்கூடியவர்களாக இருந்தார் கள். இவர்களுடைய இரவு நேர நீண்ட ஸுஜூதைக் கண்டு இவர்கள் இறந்துவிட்டார்களோ!*

என்று அவர்களது தாய் -அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொள்வானாக- அச்சம் கொள்ளுமளவு மிக அதிக நேரம் ஸுஜூதில் இருப்பார்கள். அப்போது இமாமவர்களது தாய் இமாமவர்களின் மூச்சை அறிந்து கொள்ள அவர்களது நெஞ்சுப் பக்கமாக தன் காதை வைத்துப் பார்ப்பார்கள். பின்னர் அவர்கள் உறங்கி எழுந்து பார்க்கும் போதும் தொழுது கொண்டே இருப்பார்கள். எனவே தாயவர்கள் இரவுணவு கொண்டு வந்து வைத்து விட்டு பின்பு உறங்குவார்கள். மேலும் சூரியன் உதித்த பின்பும் அவர்கள் இமாமவர்களை உணவை உண்ணாதவராக தனது பாட மீட்டல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களாகவே காண்பார்கள்.

மேலும் அவர்கள் நல்லுள்ளம் கொண்டவர்களாகவும், பற்றற்றவர்களாகவும் காணப்பட்டார்கள். சுமார் இருபது வருடங்களாக தயிர் மற்றும் ரொட்டியை மட்டுமே சாப்பிட்டு வந்தார்கள். இன்ப வாழ்க்கையை இலக்காகக் கொண்ட வர்களாக ஒருபோதும் அவர்கள் இருந்ததில்லை. மாறாக அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இதனால்தான் சமூகம் அவரை பெரிதும் விரும்பியது. மேலும் இமாமவர்கள் ஏதாவது ஒரு வீட்டிற்கு வந்தால் அந்த வீட்டாரின் குடும்பமும், அண்டை வீட்டாரும், அவர்களின் சிறுவர்கள் உட்பட அனைவரும் அவரை சூழ ஒன்று கூடுவார்கள். ஒரு தடவை அவர்களின் நாட்டின் அரசன் அவர்களை சிறை பிடித்தபோது ஹறர்

வாசிகள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியே வந்து, ‘‘அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்களை விடுவிக்கும் வரை நாங்கள் பாதைகளில்தான் தூங்குவோம்’’ எனப் போராட்டம் செய்யவே இமாமவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

தன்னுடைய எல்லா நேரங்களையும் கற்றல், கற்பித்தல், உபதேசித்தல், வழிகாட்டல், வணக்க வழிபாடு புரிதல் போன்றவற்றிலே ஈடுபடுத்துபவராகவே காணப்பட்டார்கள். மேலும் அவர்கள் தனது தலையை தாழ்த்தியவராகவும், தன்னை சூழ நடக்கக்கூடியவற்றைக் கண்டுகொள்ளா மலிருக்க தலையை மறைக்க போடப்பட்டிருக்கும் தலைப் பாகையினால் முகத்தில் ஒரு பகுதியை மறைத்தவராகவும் பாதையில் நடந்து செல்லக்கூடியவராக இருந்ததார்கள். இன்னும் குறைவாகத் தூங்கக் கூடியவர்களாகவும், அதிக நேரத்தை கிதாப்களுடன் கழிக்கக்கூடியவர்களாகவும், அல்லாஹ்வை மிகவும் அறிந்தவர்களாகவும், குர்ஆன், சுன்னாவைப் பற்றிப் பிடித்தவர்களாகவும், புத்திக் கூர்மை யுடையவர்களாகவும், பலமான, தெளிவான ஆதாரங்களைக் கொண்டு கொள்கையை நிலைநாட்டக் கூடியவர்களாகவும், ஹிக்மத்துடன் வேலைகளை அந்தந்த நேரங்களில் செய்யக் கூடியவர்களாகவும், அவர்களுக்கு கெடுதி இழைத்தவர்களை மன்னிக்கக்கூடிய நற்குணம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். மேலும் தன் தனிப்பட்ட விடயங்களுக்காக யார் மீதும் கோபம் கொள்ளாது மார்க்கத்திற்கு மாற்றமாக

செயல்படுவோர் மீதே கோபப்படக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ஒரு மனிதர் ஷைக் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டிற்கு வந்து அவர்களுடைய பாடங்களில் கலந்துகொள்பவராக இருந்தார். ஆயினும் அவர் அவருடைய சில நண்பர்களுக்காக ஷைக் அவர்களை எதிர்த்து பேசக் கூடியவராகவும் இருந்தார். இதையறிந்த ஷைக் அவர்களுடைய சில மாணவர்கள் ''இன்னார் ஒரு கிணற்றில் நீர் அருந்தி அதே கிணற்றில் கல்லெறியக் கூடியவரைப் போன்றவராக இருக்கிறார்'' என்று சொன்னார்கள். அதற்கு ஷைக் அவர்கள் ''முக்கியமென்ன வெனில் அவர் நீர் அருந்துவதே'' எனக் கூறினார்கள். அதாவது மார்க்கத்தையும் மறுமையில் அவரை வெற்றி பெறச் செய்யக் கூடியவற்றையும் கற்றுவிட்டார்.

அதே போன்று ஷைக் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் மஸ்ஜிதில் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு மனிதர் ஷைக் அவர்களுடைய நெருக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை தொடர்ச்சியாகப் பாடத்திற்கு சமுகமளிப்பது போல் காட்டிக் கொண்டிருந்தார். பின்பு ஷைக் அவர்களின் கைக் கடிகாரத்தைத் திருடிவிட்டார். அம்மஜ்லிஸில் இருந்த ஒருவர் அங்கிருந்து அவரை விரட்டி விட நாடினார். அப்போது ஷைக் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அவரை மன்னித்துவிட்டு, ''நாம் அவரை விரட்டிவிட்டால் அவர் எங்கு செல்வார்?! சில வேளை அவர் வழிகேடர் களிடத்தில் சென்றுவிடலாம்'' எனக் கூறினார்கள்.

மேலும் ஷைக் அவர்கள் மென்மையான உள்ளம் உடையவர்களாகவும், அவர்களுடைய பெற்றோர்களுக்கு -அவ்விருவரையும் அழ்ழாஹ் மன்னிப்பானாக!- உபகாரம் செய்யக் கூடியவர்களாகவும், தனது தாயிற்கு பணிவிடை செய்யக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். மற்றும் தான் மார்க்கத்தைக் கற்று, கற்றுக் கொடுப்பதுடன் தன் குடும்பத்தினருக்கு உதவுபவர்களாகவும் இருந்தார்கள்.

காலையில் நீரூற்றிலிருந்து நீரெடுக்கும் மக்களுக்கு நெருக்கடியுண்டாகாமல் இருப்பதற்காக வேண்டி ஷைக் அவர்கள் தனது வீட்டை விட்டும் தொலைவிலுள்ள அந்நீரூற்றிற்கு இரவுப் பொழுதிலே கழுதைப்புலிகளிருக்கும் அப்பகுதியால் சென்று தண்ணீர் குடத்தை நிரப்பிக் கொண்டு வருவார்கள். பின்பு ழுஹாத் தொழுகைக்குப்பின் பாடத்தை ஆரம்பிக்கும் வரை தொடர்ந்தும் கிதாபை மீட்டுவதில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார்கள். பின்னர் கற்பித்தலில் ஈடுபடுவார்கள். பின்பு ஜும்ஆ மஸ்ஜிதிற்கு சென்று அஸ்ர் தொழுகையிலிருந்து இஷா தொழுகை வரை கற்றுக் கொடுப்பார்கள். பின்பு வீட்டிற்கு வந்து தனது தாயாருக்கு பணிவிடை செய்வார்கள். மேலும் தனது தாய்க்கு முன்னால் பேசாமல் தலை குனிந்து அமைதியாக உட்காருவார்கள். தாய் அவர்களுக்கு அனுமதியளிக்காமல் அவர்களுக்கு முன்னால் ஒருபோதும் அமரவேமாட்டார்கள். அவர்களின் தாயுமோ அவர்களுக்காகப் பிரார்த்திப்பார்கள்.

*ஒரு தடவை ஷைக் அவர்கள் தன் ஊரை விட்டுவிட்டுச் சென்ற பின் சில வருடங்கள் கழித்து ஹஜ்ஜுடைய காலத்திலே கஃபாவிற்கு முன்னால் தனது தாயை சந்தித்தார்கள். அவர்களுக்கு சலாம் கூறி அவர்களுடைய இரு கரங்களையும் முத்தமிட்டார்கள். பின்பு தனது தாய் தன் உறவினர்களுடன் உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். என்றாலும் ஷைக் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் நின்ற வண்ணம் இருப்பதை பார்த்த அவர்களது தாய் ஆச்சரியத்துடன் ''என் மகனே! அமருங்கள், அப்துழ்ழாஹ்வே! அமருங்கள்'' என்று கூறும் வரைக்கும் தனது தாயக்கருகாமையில் நின்றுகொண்டேயிருந்தார்கள்.*

*மேலும் ஷைக் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களை விட்டும் மக்களை தூரப் படுத்துவதற்காக பித்அத்காரரர்களும், வழிகெட்ட பிரிவினர் களும் அவர்களுக்கெதிராக பொய்களையும், வதந்திகளையும் சொல்லிக் குவித்தும் ஷைக் அவர்கள் மார்க்கத்திற்கு முரணாக நடக்கக்கூடியவர்களைக் கடுமையாக எச்சரிக்கக் கூடியவர்களாகவும் அழ்ழாஹ்வுடைய விடயத்தில் பழிக்கக்கூடியவர்களின் பழிப்புக்குத் தயங்காது, நல்லதை ஏவி, தீயதைத் தடுக்கும் விடயத்தில் தீவிரக் கவனம் செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்.*

**அவர்களின் கல்விக்கான பயணங்களும் மற்றும் கல்வியைக் கற்பித்தலும்:**

இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுமுழ்ழாஹ் அவர்கள் அவர்களுடைய ஊர் மற்றும் அதனை அண்மித்த ஊர்களிலுள்ள அறிஞர்களிடத்தில் கற்றுக்கொண்டதைப் போதுமாக்கிக் கொள்ளாமல் “எதியோப்பியா” மற்றும் “சோமாலியா”வின் பகுதிகளில் மார்க்க அறிவிற்காக வேண்டி சுற்றித்திரிந்தார்கள். இவ்விடயத்தில் அவர்களுக்கு பல பிரயாணங்கள் உள்ளன. அவற்றில் அவர்கள் பல கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டார்கள். அவ்வாறுதான் அவர்கள் யாராவதோர் ஆலிம் எங்காவது ஓரிடத்தில் உள்ளார் என்று கேள்விப்பட்டால் அவரிடத்தில் பிரயோசனத்தை அடைய வேண்டும் என்ற நோக்கில் எவ்வித சிரமமும்பாராது பயணங்களை மேற்கொள்ளக்கூடியவர் களாக இருந்தார்கள். இதுவே ஸலபுஸ் ஸாலிஹீன்களுடைய வழமையாகவும் இருந்தது.

மேலும் அவர்களிடம் காணப்பட்ட புத்திக் கூர்மையும் மனனசக்தியும் ஷாபிஈ மத்ஹபுடைய சட்டங்களையும் அடிப்படைகளையும் அதிலுள்ள கருத்து வேற்றுமைகளையும் திறம்பட கற்பதற்கு மிக உதவியாக இருந்தது. மட்டுமல்லாமல் மற்றைய மூன்று மத்ஹப்களுடைய சட்டங்களையும், அடிப்படைகளையும் திறமையாகக் கற்பதற்கும் வழி வகுத்தது. ஆகையால் அவர்களின் பக்கம் விரல்களால் சுட்டிக்காட்டப்படும் அளவுக்கும், “எதியோப்பியா” மற்றும் “சோமாலியா”வின் தூரப் பகுதிகளிலிருந்து

மக்கள் அவர்களை நாடி பயணங்கள் மேற்கொள்ளும் அளவுக்கும் அவர்களின் திறமை காணப்பட்டது. எனவே அவர்களின் ஊராகிய ''ஹறர்'' மற்றும் அதனைய அண்டிய பகுதிகளின் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு அவர்களுக்கு சாட்டப்பட்டது.

மேலும் அவர்களுடைய வாலிப பருவத்திலே மக்களுக்கு ஈமானையும், இஸ்லாமிய சட்டங்களையும் கற்றுக் கொடுப்பதற்காக வேண்டி ஊருராக கால்நடையாகச் சுற்றித்திரிந்தார்கள். சில சமயம் வீட்டில் இருந்து சென்ற அவர்கள் ஒரு வருடம் கழித்து, அவர்களுடைய தாயுமோ தன் மகன் இறந்து விட்டார் என எண்ணி வருந்தும் காலமளவு கழிந்ததன் பின் வீட்டிற்கு மீண்டு வருபவர்களாகவும் இருந்தார்கள்.

சுமாராக ஹிஜ்ரீ 1369 கி.பி. 1949 களில் அதிகமான உலமாக்கள் கொலை செய்யப்பட்டுவந்தபோது அரசன் அவர்களையும் பகைத்ததை அறிந்த இமாமவர்கள் தனது ஊருக்கு பிரச்சினைகள் வரக்கூடுமென அஞ்சி, மக்காவிற்கு சென்றுவிட்டார்கள். அங்கே ஹஜ்ஜும் செய்தார்கள். அங்கே அஷ்-ஷைக் அல்-ஆலிம் அஸ்ஸைய்யித் அல்-அலவி அல்-மாலிகி றஹிமஹுமுழ்ழாஹ் போன்ற மக்காவின் பல ஆலிம்களுடன் அறிமுகமானார்கள். பின்பு மக்காவிலிருந்து மதீனாவிற்கு பயணத்தை மேற்கொண்டு, அங்கும் சில உலமாக்களுடன் அறிமுகமானார்கள்.

பின்னர் المحدث عبد القادر الشلبي அல்-முஹத்திஸ் அப்துல் காதிர் ஷல்பிஃ என்பவரின் மாணவரான المحدث إبراهيم الختني

*அஷ்-ஷைக் அல் முஹத்திஸ் இப்றாஹீம் அல் கதனி என்பவருடன் தோழமை கொண்டார்கள்;. பின்பு சில காலம் மதீனாவை அண்டியவராக வசித்து வந்தார்கள். அதன் பின் பலஸ்தீனிலுள்ள பைதுல் முகத்தஸ் என்ற இடத்திற்கு ஹி 1370 கி.பி. 1950ம் ஆண்டு சென்றார்கள். அதன் பின் அங்கிருந்து டமஸ்கஸிற்கு சென்றார்கள். டமஸ்கஸ் நகர மக்களும் அவர்களை வரவேற்றார்கள். இது ஷாம் தேச முஹத்திஸான அஷ்-ஷைக் பத்ருத்தீன் அல்-ஹஸனி றஹிமஹுமுழ்ழாஹ் அவர்களுடைய மரணத்தின் பின்னராகும்.*

*பின்னர் "கைமரிய்யஹ்" என்ற இடத்திலுள்ள "ஜாமிஉல் கத்தாதில்" தங்கினார்கள். அவர்களுடைய புகழ் அங்கு பரவியது. ஷாம் தேசத்து ஆலிம்களும் அவர் களுடைய மாணவர்களும் இவர்களிடமிருந்து பிரயோசனம் பெற வந்துசென்றதுடன் அவர்களின் சிறப்புக்கு சான்றுபகர்ந்து அவர்களின் இல்மையும் ஏற்றுக் கொண்டார்கள். எனவே ஷாம் தேசத்தில் - "கலீபதுஷ் ஷைய்க் பத்ரித்தீன் அல்ஹஸனீ"* **خليفة الشيخ بدر الدين الحسني** *- "அஷ்ஷைய்க் பத்ருத்தீன் அல்ஹஸனீ றஹிமஹுமுழ்ழாஹ் அவர்களின் பிரதிநிதி"யெனவும், - "முஹத்திஸுத் தியாரிஷ் ஷாமிய்யஹ்"* **محدث الديار الشامية**- *"ஷாம் தேசத்து முஹத்திஸ்" எனவும் பிரபல்யம் பெற்றார்கள். மேலும் அவர்கள் ஷாம் தேசத்து ஊர்களான திமஷ்க், பைரூத், ஹிம்ஸ், ஹலப், ஹமாத், போன்ற சிரியா, லெபனான் நகரங்களுக்கு சென்றுவருபவர் களாக இருந்தார்கள். இறுதியாக பைரூத்தில் குடியேறினார் கள்.*

**ஷைக் அவர்களுடைய ஆசிரியர்கள்:**

ஆரம்பத்தில் அவரது தந்தையாகிய محمد بن يوسف முஹம்மத் இப்னு யூஸுப் அவர்களிடம் கல்வியைக் கற்றார்கள். மேலும் الشيخ العالم علي شريف அஷ்ஷைய்க் அல்-ஆலிம் அலீ ஷரீப் அவர்களிடம் தஜ்வீத், தர்தீல் மற்றும் ஹிப்ழாகக் குர்ஆனையும் இன்னும் அகீதாவுடைய அறிவையும் எடுத்ததோடு ஷாபிஈ சட்டக்கலையையும், அறபு இலக்கணத்தையும் العالم النحرير الشيخ الولي محمد بن عبد السلام الهرري அஷ்ஷைய்க் அல்வலிய்யு அல்-ஆலிம் முஹம்மத் இப்னு அப்திஸ்ஸலாம் அல்-ஹறரீ அவர்களிடமும் கற்றுக் கொண்டார்கள். மேலும் الشيخ أحمد بن النقيب الشافعي அஷ்ஷைய்க் அஹ்மத் இப்னு அன்நகீபுஷ் ஷாபிஈ அவர்களுக்குரிய ''உம்த துஸ் ஸாலிக் வஉத்ததுன் நாஸிக்'' عمدة السالك وعدة الناسك என்ற நூலை الشيخ إبراهيم بن أبي الغيث الهرري அஷ்ஷைய்க் இப்றாஹீம் இப்னு அபில் கைஸ் அல்-ஹறரீ அவர்களிடமும், மேலும் அறபு இலக்கணம், சொல்லிலக்கணம் மற்றும் இலக்கியம் ஆகியவற்றை الشيخ الصالح أحمد الضرير الملقب بالبصير அஷ்ஷையக் அஸ்ஸாலிஹ் அஹ்மத் அழ்ழரீர் அவர் களிடமும் படித்துக்கொண்டார்கள். الشيخ بشرى كاروكي அஷ் ஷைய்க் புஷ்றா காரூகி அவர்களிடம் (அல் அரூழ் வல்கவாபீ علم العروض والقوافي யாப்பு இலக்கணம் எனும்) செய்யுள் அமைப்பியலையும் கற்றுக்கொண்டார்கள். மேலும் இமாமவர்கள் மதீனாவிலே الشيخ المحدث محمد علي أعظم الصديقي البكري الهندي الأصل ثم المدني الحنفي அஷ்ஷைகுல் முஹத்திஸ் முஹம்மத் அலீ அஃலம் அஸ்ஸித்தீகீ அல் பக்ரீ அல் ஹனபீ அவர்களின் தோழமையைப் பெற்றார்கள். மேலும் ஷாம் தேசத்திலுள்ள பல அறிஞர்களிடமும் பல

கலைகளைப் கற்றிருக்கிறார்கள். இவர்களல்லாத இன்னும் பல ஆசிரியர் களும் அவர்களுக்கு உள்ளனர். அழ்ழாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

**அவர்களைப் பற்றிய உலமாக்களின் புகழாரங்கள்:**

இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ அவர்களை அதிகமான உலமாக்கள் புகழ்ந்துள்ளார்கள். அவர்களில் சிலர்:

**அஷ்ஷைஹ் இஸ்ஸுத்தீன் அஷ்ஷாபிஈ அன் நக் ஷபன்தீ அவர்களும் மற்றும் அவர்களின் சகோதரர் அஷ்ஷைக் அலாஉத்தீன் றஹிமஹுமழ்ழாஹ் அவர்களும்.**

அஷ்ஷைக் இஸ்ஸுத்தீன் அவர்கள் கூறினார்கள்: “நானுமோ எனது சிறு பராயத்தில் எனது சகோதரர் அஷ்ஷைக் அலாவுத்தீன் அவர்களுடன் இருந்தேன். அவருமோ என்னை அஷ்ஷைஹ் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ அவர்களிடம் அழைத்துச் சென்று “இவர்கள்தான் அல்-முஹத்திஸ் அல்-பகீஹ் அல்-அல்லாமஹ் அஷ்ஷைக் அப்துழ்ழாஹ் அல் ஹபஷீ ஆவார்கள் அவர்களிடம் சென்று அவர்களின் கையை முத்தமிடுவீராக” எனக் கூறினார்கள். நானும் அவ்வாறே செய்தேன்.

மேலும் அஷ்ஷைக் இஸ்ஸுத்தீன் அவர்கள் லெபனானிலுள்ள அவர்களுடைய ஜமாஅத்தைச் சார்ந்தவர் களுக்கு “நீங்கள் மார்க்க சம்மந்தமாக ஏதேனும் கேட்பதாக இருந்தால் என்னிடத்தில் வராதீர்கள். மாறாக

அஷ்ஷைஹ் அப்துழ்ழாஹ்விடம் செல்லுங்கள்'' எனக் கூறினார்கள்.

**திமஷ்கிலுள்ள மஸ்ஜிதுல் உமவியின் இமாம் மற்றும் அதன் நிர்வாகியாகிய அஷ்ஷைக் அப்துர்றாஸிக் அல்ஹலபி றஹிமஹுழ்ழாஹ் அவர்கள்.**

''திமஸ்கிலிருந்து மக்காவிற்கும் அங்கிருந்து திமஷ்கிற்கும் நாம் ஷைக் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ யுடன் ஹஜ் பயணம் மேற்கொண்ட போது அவர்களிடம் பேணுதலைத் தவிர வேறு எதனையும் நாம் காணவில்லை'' எனக் கூறினார்கள்.

**அஷ்ஷைக் உஸ்மான் ஸிறாஜுத்தீன் றஹிமஹுமழ்ழாஹ் அவர்கள்.**

இமாம் ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் மாணவர் ஒருவரிடத்தில் ''அஷ்ஷைஹ் அப்துழ்ழாஹ் அவர்களுக்கு ஸலாம் கூறியதாக கூறுமாறும், நான் அவர்களை நேசிக்கின்றேன் என்றும் மேலும் எனக்காக பிரார்த்திக்கு மாறும் அவர்களிடம் கூறுங்கள்'' எனக்கூறிவிட்டு ''அஷ்ஷைக் அப்துழ்ழாஹ் அவர்களைப் போன்று அறபுலகிலும், இஸ்லாமிய உலகிலும் யாரும் இல்லை'' என்றார்கள்.

இன்னும் அவர்களைப் புகழ்ந்தவர்களில் நின்றுமுள்ளவர்கள்தான்:

- **சிரியாவின் முப்தியான அஷ்ஷைக் அபுல்யஸ்ர் ஆபிதீன் அவர்கள்.**

- ***அல்அல்லாமதுல் முதபன்னின் அப்துழ்ழாஹிப்னுஸ் ஸித்தீக் அல்குமாரீ அவர்கள்.***
- ***அல்அல்லாமஹ் அப்துல் அஸீஸ் இப்னு ஸித்தீக் அல்குமாரீ அவர்கள்.***
- ***முஸ்னிதுல் ஆலம் ஷைகுல் ஹதீஸி வல் இஸ்னாதி முஹம்மத் யாஸீன் அல்பாதானீ அவர்கள்.***
- ***அல் முஹத்திஸுல் கபீர் அல்அல்லாமஹ் ஹபீபுர் றஹ்மான் அல்அஃழமீ அவர்கள்.***
- ***ஷைகுல் ஹதீஸ் அல்அல்லாமஹ் முஹம்மத் ஸகரிய்யா அல்கான்தஹ்லவீ அவர்கள்.***

**ஷைக் அவர்களின் பைரூத் வருகை:**

*ஷைக் அவர்கள் ஹிஜ்ரீ 1370, கி.பி. 1950ல் பைரூத்திற்கு வந்தார்கள். பின்பு ஷைக் காழீ முஹ்யித்தீன் அல்-அஜூஸ் இன்னும் அஷ்ஷைக் அல்முஸ்தஷார் முஹம்மத் அஷ்ஷரீப் போன்ற பைரூத்தின் மூத்த ஷைக் மார்கள் அவர்களை விருந்தாளியாக எடுத்துக் கொண்டார் கள். மேலும் அக்கார் என்ற இடத்தின் முப்தீ பஹாஉத்தீன் அல்கைலானி அவர்கள் மேலும் அல் பஸ்தல் பௌகா ஜூமுஆ மஸ்ஜிதின் இமாம் அஷ்ஷைக் அப்துல் வஹ்ஹாப் அல்-பூதாரி அவர்கள் மேலும் புர்ஜ் அபீ ஹைதர் ஜூமுஅஹ் மஸ்ஜிதின் முஅத்தினும் இமாமுமான அஷ்ஷைக் அஹ்மத் இஸ்கன்தரானி போன்ற உலமாக்கள் அஷ்ஷைக் முஹம்மத் அஷ்ஷரீப் அவர்களின் வீட்டிலே இணைந்து, ஷைக் அவர்களைப் பற்றிப்பிடித்து அவர்களிடத்திலிருந்து பிரயோசனமும் கண்டு கொண்டார்கள். இன்னும் இவர்கள் தவிர பலர்*

*உதாரணமாக முன்னால் பத்வாக் குழுவின் தலைவர் அஷ்-ஷைக் முக்தார் அல்-அலாலி அவர்கள் ஷைக் அவர்களின் சிறப்பையும் அறிவின் விசாலத்தையும் உறுதிப்படுத்தி தாருல் பத்வாவின் மூலம் பைரூத்திலுள்ள பள்ளிவாயல்களில் மார்க்கரீதியான மஜ்லிஸ்களை நடாத்துவதற்கு எழுத்து மூல சான்றை வழங்கினார்கள். அதே போன்று ஹிஜ்ரி 1389, கி.பி. 1969ல் அப்போது லெபனானில் இருந்த அல்அஸ்ஹர் கலாபீடத்தின் நிர்வாகியின் வேண்டுகோளுக்கிணங்க அல்-அஸ்ஹர் மாணவர்களுக்கு அகீதஹ் தொடர்பான ஒரு கருத்தரங்கையும் நடத்தினார்கள்.*

## இமாமவர்களின் தஸவ்வுப் பயணம்:

*ஷைக் அவர்கள் இஸ்லாமிய அறிவுகள் பலவற்றில் ஒளிவீசும் தீபமாகவும், தூணாகவும் இருந்தது போலவே ஸூபித்துவ துறையிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். இரவு வணக்கங்கள், பணிவு, சகிப்புத்தன்மை, பொறுமை, தாழ்வு, அர்ப்பணிப்பு, உலகப்பற்று போன்ற ஸூபி மகான்களின் அதி உன்னத பண்புகளுடன் மிளிர்ந்தார்கள். இஸ்லாமிய அகீதாவை கூடுதல் கவனம் செலுத்தி கற்பித்ததுடன், தரீக்கஹ் விழுமியங்களையும், ஸூபி மகான்களின் வழிகாட்டல்களையும் வழங்கி தம் மாணவர்களையும், முரீதுகளையும் நன்நெறிப்படுத்தும் ஷைய்காகவும் விளங்கினார்கள். அவர்கள் “காதிரிய்யஹ்” மற்றும் “ரிபாயிய்யஹ்” தரீக்கஹ்களின் ஷைய்காக இஜாஸா பெற்றிருந்ததுடன், அத்தரீக்கஹ்களை உயிர்ப்பித்த ஞான குருவாகவும் திகழ்ந்தார்கள். மேலும் ஏனைய தரீக்கஹ் களிலும் இஜாஸா பெற்றிருந்தார்கள். பல கராமத்துகளை*

*உடைய பெரும் வலிய்யுல்லாஹ்வாகவும், வலிமார்கள் பலரை உருவாக்கிய ஒரு பெருந்தகையாகவும் திகழ்ந்தார்கள்.*

**அவர்களுடைய மரணம்:**

*இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்களுக்கு நோய் கடுமையானது. ஆகையால் அது அவர்களை சில மாதங்களாக படுக்கையில் ஆக்கியது. அப்போது கூட அவர்கள் அகீதா பற்றியும் வழிகேடான சிந்தனைகளை எச்சரிப்பதையும் விடாது தன்னை சந்திக்க வருபவர்களிடமெல்லாம் நினைவூட்டிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் ஹிஜ்ரீ 1429, கி.பி. 2008ம் ஆண்டு ரமழான் மாதம் இரண்டாம் நாள் செவ்வாய் கிழமை பஜ்ருடைய நேரத்தில் மரணித்தார்கள். அவர்கள் பைரூத்திலே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய கப்றரையை இன்றும் மக்கள் பறகத் பெறும் நோக்கில் தரிசித்து வருகின்றனர்.*

*அல்லாஹ் அவர்களது ஹித்மாத்களைப் பொருந்திக் கொண்டு, மேலான பிர்தௌஸை அவர்களுக்குக் கூலியாக வழங்குவானாக!*

**ஷைக் அவர்களின் நூற்கள்:**

*மக்களின் நம்பிக்கைக் கோட்பாட்டை சீர் செய்தல், மார்க்கத்திற்கு முரணானவர்களை எதிர்த்தல், வழிகெட்ட பித்அத்வாதிகளின் பித்னாக்களை அடக்குதல் போன்றவற்றில் ஷைக் அவர்கள் மும்முறமாக ஈடுபட்டதாலும், இதற்காக வெனவே நேரடியாக*

களத்தில் இறங்கி பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு சத்தியத்தை பாதுகாக்க குரல் கொடுத்து வந்ததாலும் கிதாபுகளை கோர்வை செய்வதில் பெரிதும் அவர்களால் கவனம் செலுத்த முடியாமல் போனது. அவ்வாறிருந்தும் பல பெறுமதி மிக்க கிதாபுகளை விட்டுச் சென்றுதான் உள்ளார்கள்.

அவற்றில் சில:

1. **அஸ்ஸிறாதுல் முஸ்தகீம்.**
2. **அஷ்ஷர்ஹுல் கவீம்.**
3. **ஸரீஹுல் பயான்.**
4. **இழ்ஹாருல் அகீததிஸ் ஸுன்னிய்யஹ்.**
5. **அல் மதாலிபுல் வபிய்யஹ்.**
6. **ரிஸாலதுர் றத்தி அலத் தாஈ அல் காதியானீ.**
7. **அத்தஅக்குபுல் ஹஸீஸ்.**
8. **அந் நஹ்ஜுஸ் ஸவீய்.**
9. **முஹ்தஸர் அப்தில்லாஹ் அல்-ஹறரி.**
10. **புஃயதுத் தாலிப்.**

இவை ஷைக் அவர்களின் கோர்வைகளில் சிலதே. இங்கு குறிப்பிடப்படாத பெறுமதியான இன்னும் பல நூற்கள் அவர்களுக்குள்ளன.

"لا يؤخذ العلم إلا من أفواه العلماء"

# "இஸ்லாமிய அறிவு அறிஞர்களிடமிருந்து நேரடியாகவே பெறப்படவேண்டும்"

-அல்-ஹாபிழ் அபூபக்ரினில் கதீப் அல்-பக்தாதீ றஹிமஹுல்லாஹ் அவர்கள்

**கற்ற, நம்பிக்கை மிக்கவர்களிடமிருந்தே மார்க்க அறிவுகள் கற்கப்பட வேண்டுமே தவிர வெறுமனே நூற்களை வாசித்தல்ல. அந்த அடிப்படையில் இந்த நூலையும் ஆசிரியர்களின் துணையுடன் கற்க வேண்டுகிறோம்.**

## (அல்லாஹ்வின்) முதலாவது பண்பு: உள்ளமை

இஸ்லாமியக் கோட்பாடு அமைக்கப்படும் அடிப்படை அல்லாஹ்வை அறிவதும், அவனது தூதரை அறிவதுமாகும். அல்லாஹ்வை அறிவதென்பது அவன் உள்ளான் என அறிவதாகும். எனவே அவன் ஆரம்பமின்றி உள்ளான் -அதாவது அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமில்லை- என்று உறுதி கொள்வது கடமையாகும். ﴿أَفِي اللَّهِ شَكٌّ﴾ ((அல்லாஹ்வி(ன் உள்ளமையி)லும் சந்தேகமா?!)) என்று அல்லாஹு தஆலா கூறியுள்ளான். மேலும் அவன் ﴿هُوَ الْأَوَّلُ﴾ அதாவது அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமில்லை எனக் கூறியுள்ளான்.

"ஸஹீஹ்"இல் (இமாம்) புகாரியும் இன்னும் (இமாம்) பைஹகியும் மற்றும் (இமாம்) அபூபக்ருப்னுல் ஜாரூதும் இம்ரான் இப்னு ஹுஸைன் (றழியல்லாஹு அன்ஹுமா) அவர்களைத் தொட்டும் அறிவித்துள்ளார்கள்.

யமன்வாசிகளில் ஒரு கூட்டம் றஸூலுல்லாஹி ﷺ அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் மார்க்கத்தில் விளக்கம் பெறுவதற்கும், இவ்(வுலக) விடயம் எதுவாக இருந்தது? என்பது பற்றி கேட்பதற்கும் உங்களிடம் வந்துள்ளோம்" எனக் கூறினார்கள். மற்றுமொரு வாசகத்தில் عن أول هذا الأمر "இவ்(வுலக) விடயத்தின் ஆரம்பம் பற்றி" என உள்ளது. அதற்கு நபி ﷺ

*அவர்கள் "அழ்ழாஹ் அவனன்றி வேறேதும் இல்லாத போது இருந்தான். மேலும் தண்ணீரின் மீது அவனது அர்ஷ் இருந்தது. (திக்ர் எனும்) லௌஹுல் மஹ்பூலில் அனைத்தையும் பதிவிட்டான்" எனக் கூறினார்கள். அவர்களது கேள்வி (عالم) ஆலத்தின்[1] ஆரம்பம் பற்றியதாக இருந்தது. எனினும் றஸூல் ﷺ அவர்கள் அதனை விடவும் மிக முக்கியமான ஒன்றை அவர்களுக்கு பதிலாகச் சொன்னார்கள். அதுதான் كان الله ولم يكن شيء غيره (அழ்ழாஹ் அவனன்றி வேறேதும் இல்லாத போது இருந்தான்) என்ற அவர்களது கூற்றாகும். அதாவது அழ்ழாஹ் ஆரம்பமின்றி உள்ளான். அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமும் கிடையாது. அவனுடன் ஆரம்பமின்றி எதுவும் இருக்கவில்லை அதாவது காலமுமில்லை, இடமுமில்லை, சடப்பொருட்களுமில்லை. அத்துடன் தண்ணீரும், அர்ஷும் அவ்விரண்டுமல்லாத ஏனைய படைப்புகளுக்கு முன்பே காணப்பட்டிருந்தன என்று அவர்களின் (கேள்விக்குரிய) பதிலைத் துயர்த்திவைத்தார்கள். மேலும் அர்ஷுக்கு முன் தண்ணீர் இருந்தது எனவும் அவர்களுக்கு தெரியப்படுத்தினார்கள். ஏனெனில் அவர்கள் وكان عرشه على الماء (தண்ணீரின் மீது அவனது அர்ஷ் இருந்தது) என்று அவர்களுக்குக் கூறிய போது தண்ணீர் அர்ஷுக்கு முன்னர் படைக்கப்பட்டிருந்தது என்பதை அவர்களுக்கு விளங்கப்படுத்தினார்கள்.*

[1] *அழ்ழாஹ் அல்லாத அனைத்துப் படைப்பினமும் ஆலம் என அழைக்கப்படும்.*

*றஸூல் (ﷺ) அவர்களை அறிவதென்பது: அவர்கள் அழ்ழாஹ்வை தொட்டும் எத்திவைப்பவர்கள் என்றும் மேலும் வாஜிபாக்குவதிலும், ஹறாமாக்குவதிலும் மற்றும் நடந்தவற்றைப் பற்றியும், துன்யாவிலும், (برزخ) "பர்சஹ்"[2] இலும், ஆகிறஹ்விலும் நடக்கப்போவது பற்றியும் அறிவிப்பதிலும் அவர்கள் எதனைக் கொண்டு வந்தார்களோ அதிலே உண்மையாளர் என்றும் அறிவதாகும்;.*

*எனவே யார் அவற்றை எவ்வித ஐயமும், சந்தேகமுமின்றி உறுதி கொள்கின்றாரோ அவர் அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் அறிந்தவரும் மேலும் அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டவருமாவார். அவர் அதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரத்தை அறிவதும் அறியாமலிருப்பதும் சமமே.*

*முஃதஸிலாக்கள் ஈமான் செல்லுபடியாவதற்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரத்தை அறிந்திருப்பதை நிபந்தனையிட்டதன் மூலம் வழிதவறிவிட்டார்கள். சத்தியவான்கள் அதனை நிபந்தனையிடுவதில்லை. எனினும் அவர்கள் பகுத்தறிவு ரீதியான ஆதாரத்தின் மூலம் அழ்ழாஹ்வின் உள்ளமைக்கு ஆதாரமெடுப்பது கடமை எனக் கருதுகின்றனர். அது சுருக்கமான ஆதாரமாக இருந்த போதிலும் சரியே.*

*சுருக்கமான இவ்வாதாரமோ ஒவ்வொரு முஃமினிடமும் உள்ளது. இவ்வுலகம் மாற்றமடையக்கூடியது. மாற்றமடையக்கூடிய*

---

[2] *மரணித்ததிலிருந்து எழுப்பப்படும் வரையிலுள்ள "திரையுலக வாழ்வு".*

*அனைத்தும் படைக்கப்பட்டவையே. எனவே இவ்வுலகமானது படைக்கப்பட்டதாகும். ஆகவே அதற்கு படைப்பாளன் ஒருவன் இருப்பது அவசியமாகும். அந்தப் படைப்பாளனே அந்த உருவாக்கியவனே "அழ்ழாஹ்" என்று அழைக்கப்படுகின்றான் எனச் சொல்லப்படுவதைப் போன்று இவ்வாதாரத்தின் ஒழுங்கு முறையை அவர் அறியாத போதிலும் சரியே. எனவே எவரொருவர் அவரது பகுத்தறிவினால் சரியான அமைப்பில் சிந்திக்கின்றாரோ அது அவருக்கு அதனை (அவ்வாதாரத்தின் ஒழுங்குமுறையை)த் தெரியப்படுத்தும்.*

*ஆகவே கற்ற அல்லது கற்காத முஸ்லிம் இச்சுருக்கமான ஆதாரமெடுத்தலை விட்டும் நீங்கியிருக்கமாட்டார். இவ்வாதாரமெடுத்தலிற்கு* (**الاستدلال الطبيعي** *"அல்-இஸ்தித்லாலுத் தபீஈ") "இயல்பான ஆதாரமெடுப்பு" எனப் பெயர் சொல்லப்படும். இச்சுருக்கமான ஆதாரம் ஒரு முஸ்லிமிடம் இல்லாமலிருப்பதைக் கற்பனை செய்யக்கூட முடியாது. எனினும் "படைப்பினத்திற்கு அவர்களைப் படைத்த, அவர்கள் கட்டாயம் வணங்குவதற்குத் தகுதியான ஒரு றப்பு இருக்கிறான்" என்று சில மனிதர்கள் சொல்வதைக் கேட்டு, அவர்களை தவறை விட்டும் தூய்மைப்படுத்தியதனால் அவர்களை உண்மைப்படுத்தி, அதை உறுதிகொண்டு எந்தவோர் ஆதாரத்தையும் சிந்திக்காத மலை உச்சியில் வளர்ந்தவரிடமே தவிர. இவருடைய ஈமானும் சரியானதாகும். எனினும் அவர் மீது (அதற்காக) ஆதாரமெடுத்தல் கடமையாகும். எனவே*

*ஆதாரமெடுக்காத முஃமின் அவர் பாவியென சத்தியவான்கள் கூறியுள்ளனர். ஏனெனில் அது ஆலத்தின் நிலையின் மூலம் அதனைப் படைத்தவன் உள்ளான் என்பதற்கு ஆதாரமெடுப்பதற்காக வேண்டி அல்லாஹு தபாரக வதஆலா அவனுடைய படைப்புகள் பற்றி சிந்திக்கும்படி ஏவியுள்ளான் என்பதனாலாகும்.*

*அல்லாஹ்வின் உள்ளமையையும், வணங்குவதற்கு -அதாவது: பணிவின் தீர்ச்சைக்கு- தகுதிபெறுவதில் அவன் தனித்துவம் பெற்றிருப்பதையும் அறிந்ததன் பின்பு அல்லாஹ்வின் பண்புகளில் நின்றுமுள்ள பதின்மூன்று பண்புகளில் எஞ்சியதை அறிவதும் அவசியமாகும்.*

*அவையாவன :*

- *பூர்வீகம் (ஆரம்பமின்மை).*
- *முடிவின்மை.*
- *படைப்புகளுக்கு மாற்றமாக இருத்தல்.*
- *தன்னிலே நிலைத்திருத்தல். (பிறரின் பால் தேவைகாணாதிருத்தல்).*
- *(இணையின்றித்) தனித்திருத்தல்.*
- *மரணமில்லாமை.*
- *வல்லமை.*
- *நாட்டம்.*
- *அறிவு.*
- *கேட்டல்.*
- *பார்த்தல்.*

- பேச்சு.

***இப்பண்புகளுக்கான சுருக்கமான ஆதாரம்:*** அல்லாஹு தஆலா இப்பண்புகளைக் கொண்டு வர்ணிப்புப்பெற்றவனாக இல்லையென்றால் இவ் (عالم) "ஆலம்" இருந்திருக்கமாட்டாது ***எனக் கூறப்படுவதாகும்.*** எனவே இந்த சுருக்கமான ஆதாரமெடுப்பு கட்டாயமான ஆதாரமெடுப்புக்கு போதுமானதாகும்.

***(அவற்றிற்கான) விரிவான ஆதாரங்கள்:*** அவற்றை அறிவது (فرض عين) பர்ளு ஐன்களில் நின்றுமுள்ளதல்ல. மாறாக அது (فرض كفاية) பர்ளு கிபாயஹ்களில் நின்றுமுள்ளதாகும். ஆதாரத்தைக் கொண்டு பதின்மூன்று பண்புகளில் மிகுதியானவைகளையும், அதனை தொடரக்கூடிய நம்பிக்கை சார்ந்த அடிப்படைகளையும் அறிந்தவர் முஸ்லிம்களில் இருந்தால் அவர் ஏனைய முஸ்லிம்களை விட்டும் குற்றத்தை விழுத்தாட்டிவிடுவார். ஏனெனில் நம்பிக்கையில் (அஹ்லுஸ்ஸுன்னஹ்களின் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையுடைய) பித்அத்வாதிகள் மற்றும் இறைமறுப்பாளர்களின் சந்தேகங்களை முறியடிப்பதற்கு அதன் பால் தேவை காணப்படுகின்றது என்பதற்காகவாகும். இறைமறுப்பாளன் ஒருவன் வந்து, "அல்லாஹு தஆலாவின் உள்ளமைக்கு பகுத்தறிவு ரீதியான ஒர் ஆதாரத்தை எனக்குத் தாருங்கள்" என முஸ்லிம்களிடம் கேட்டால் அவனுடைய போலி ஆதாரங்களையும், சந்தேகங்களை உண்டுபண்ணக் கூடியவைகளையும் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களில் விரிவான ஆதாரங்களை முன்வைப்பது கொண்டு நீக்குவது அவசியமாகும். ஏனெனில் இந்த இறைமறுப்பாளனிடம் ﴿أَفِي اللَّهِ شَكٌّ﴾ ((அல்லாஹ்வி(ன்

*உள்ளமையி)லும் சந்தேகமா?!)) என்றோ அல்லது* ﴿وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ﴾ *(அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுடையவன்) அல்லது* ﴿وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ﴾ *(அவனே அனைத்தையும் நன்கறிந்தவன்) என்றோ அல்லது* ﴿هُوَ الْأَوَّلُ﴾ *அதாவது (அவனே ஆரம்பமில்லாதவன்) என்றோ அல்லது* ﴿إِنَّ اللَّهَ لَغَنِيٌّ عَنِ الْعَالَمِينَ﴾ *(நிச்சயமாக அல்லாஹ் படைப்புகளை விட்டும் தேவையற்றவன்) என்றோ அல்லது அது போன்றதையோ அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான் எனக் கூறப்பட்டால் இறைமறுப்பாளனான அவன் ''நான் உங்கள் வேதத்தை நம்பிக்கை கொள்ளமாட்டேன். நீங்கள் எனக்கு உங்கள் வேதத்திலிருந்து எதையும் குறிப்பிடுவதையும் நான் விரும்பமாட்டேன்'' எனக் கூறிவிடுவான். எனவே நீ அவனது போலி ஆதாரங்களையும், சந்தேகங்களை உண்டுபண்ணக் கூடியவைகளையும் எவ்வாறு முறியடிப்பாய்?*

*அதற்கு ஓர் உதாரணம்: சூரியனை வணங்குபவன் ''எனது கடவுள் உணரப்படக்கூடிய வெளிப்படையான மனிதனுக்கும் ஏனைய பிராணிகள், தாவரங்கள், தண்ணீர் மற்றும் காற்று என்பவற்றிற்கும் பிரயோசனமளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. எனவே எவ்வாறு எனது இம்மார்க்கம் உண்மையாக இருக்க முடியாது? நாங்களும், நீங்களும் அது உள்ளதென அறிகின்றோம். அது பார்க்கும் புலனால் உணரப்படக்கூடியதுமாகும். எனவே எவ்வாறு எனது இந்த மார்க்கம் பிழையானது என நீங்கள் கூற முடியும்?'' எனக் கேட்க, இவனுக்கு ''அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்'' எனக் கூறப்பட்டால் அவன் ''நான் உங்களது வேதத்தை ஈமான் கொள்ளவில்லை. பகுத்தறிவு ரீதியான ஓர் ஆதாரத்தையே*

*நான் உங்களிடமிருந்து விரும்புகின்றேன். நீங்கள் அதனை பெற்று, எனக்கு நிரூபித்தால் நான் உங்களை ஏற்றுக்கொள்கின்றேன் அவ்வாறில்லையெனில் எவ்வாறு என்னிடத்தில் நீங்கள் உங்களது மார்க்கத்தை ஈமான் கொள்ளுமாறு வேண்டுவீர்கள்? எனக் கூறிவிடுவான்.*

*எனவே இவனுக்கு எவ்வாறு ஆதாரத்தை நிலைநாட்டப்படும்?*

*அகீதாவுடைய கல்வி, அறிவிப்பு (அதாவது குர்ஆன், ஹதீஸ்) ரீதியான ஆதாரங்களுடன் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களின் தெளிவை -அதன் பால் கடும் தேவை இருந்தும் கூட- அவற்றை உள்ளடக்கிக் கொள்ளமாட்டாது எனக் கருதும் இவர்களால் அந்த இறைமறுப்பாளரை வாயடைக்கச்செய்ய முடியாது. ஆனாலும் அல்லாஹ்வை விதத்தையும், அளவையும், இடம் மற்றும் திசை எடுத்துக்கொள்வதையும் விட்டுப் பரிசுத்தபடுத்தும் அஹ்லுஸ்ஸுன்னஹ்வைச் சேர்ந்தவராலேயே அவனை வாயடைக்கச் செய்ய முடியும். அவர் அவனுக்கு “உனது இக்கடவுள் அதற்கு ஓர் அளவும், தோற்றமும் இருக்கின்றன. எனவே அதனை இந்தளவிலும் மற்றும் தோற்றத்திலும் ஆக்கியவனின் பால் அது தேவைகாணுகின்றது. எனினும் உண்மையில் வணங்கப்படத் தகுதியானவன் அவன் எவ்வித அளவோ, தோற்றமோ இல்லாமல் உள்ளவன். எனவே அவன் அவனல்லாததின் பக்கம் தேவைகாணமாட்டான். ஆனால் உன்னால் வணங்கப்படும் சூரியனோ அதுவே தன்னை அந்தளவிலும், அத்தோற்றத்திலும் ஆக்கிக்கொண்டது என்பது பகுத்தறிவிலே சாத்தியமாக*

*முடியாது. எனவே உண்மையில் வணங்கப்பட தகுதியானவன் படைப்புகளை போன்றில்லாமலுள்ள எமது கடவுளே'' எனக் கூறுவார். இங்குதான் சூரியனை வணங்குபவன் வாயடைத்துப்போய்விடுகின்றான்.*

மேலும் ﴿وَفِي أَنْفُسِكُمْ أَفَلَا تُبْصِرُونَ﴾ *"(அத்தாட்சிகள்) உங்களிலேயும் உள்ளன. நீங்கள் (அவற்றை) ஆழ்ந்து கவனித்துப் பார்க்கமாட்டீர்களா?'' அதாவது "நிச்சயமாக அல்லாஹ்வின் உள்ளமைக்கு ஆதாரம் உங்களிலேயே உள்ளது'' என்ற அல்லாஹ்வின் கூற்றைப் போன்ற பல வசனங்களின் மூலம் குர்ஆன் பகுத்தறிவு ரீதியான ஆதாரமெடுப்பின் பால் வழிகாட்டுகின்றது.*

*இதற்கு அகீதாதுறை அறிஞர்கள் சிலர் ஓர்; உதாரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதுவாகிறது: நான் இல்லாமலிருந்து பின்பு உருவானேன். இல்லாமலிருந்த பின்பு உருவானதிற்கு உருவாக்கிய ஒருவன் அவசியமாகும். எனவே என்னை உருவாக்கிய ஒருவன் இருப்பது அவசியமாகும்.*

*அந்த உருவாக்கியவனே எனக்கும், புதிதாக உருவானதில் என்னுடன் கூட்டுச்சேரும் புதியவைகளில் எதற்கும் ஒப்பாகமாட்டான். மேலும் அந்த உருவாக்கியவனே "அல்லாஹ்'' எனவும் பெயர்சொல்லப்படுகிறான் என்பது இக்கூற்றிலிருந்து தீர்ப்பெடுக்கப்படுகின்றது.*

## இரண்டாவது பண்பு:
## பூர்வீகம்

*(القدم) ''அல்கிதம்'' (பூர்வீகம்)* என்பதன் அர்த்தம் (الأزلية) *''அல்அஸலிய்யத்'' (ஆரம்பமில்லாதிருத்தல்)* என்பதாகும். எனவே (الله قديم) *''அல்லாஹு கதீமுன்'' (அல்லாஹ் பூர்வீகமானவன்)* என்று கூறப்பட்டால் அதன் அர்த்தம் அவனுடைய உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமில்லை என்பதாகும். இது அல்லாஹ்வின் விடயத்திலாகும். அவன் அல்லாததின் விடயத்தில் (قديم) *''கதீம்'' (பூர்வீகமானது)* என்று கூறப்பட்டால் அதன் அர்த்தம் அதன் மீது நீண்ட காலம் கழிந்துவிட்டது என்பதாகும். மேலும் (الأزلي) *''அல்அஸலிய்யு''*வும் அவ்வாறான (இரு அர்த்தங்களைக் கொண்ட)தாகும். எனவே அல்லாஹு தஆலா அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமில்லை என்ற இவ்வர்த்தத்தில் அவனே (الأزلي) *''அல்அஸலிய்யு''* ஆவான். எனவே அல்லாஹ்வையன்றி வேறெவரும் *(ஆரம்பமற்ற)* (الأزلي) *''அல்-அஸலிய்யு''*வாக இல்லை.

நீண்ட காலம் *(கழிதல்)* எனும் அர்த்தத்தைக் கொண்ட (الأزلي) *''அல்அஸலிய்யு''*வானது அதைக் கொண்டு *(அறபு)* மொழியிலும் மற்றும் அறிவுடையோர்களின் *(புழக்கப்)* பாஷையிலும் படைப்பே வர்ணிக்கப்படும். *(அறபு)* மொழியில்: *''அல்காமூஸு'' (எனும் அகராதி)*க்குரியவரான *(இமாம்)*

பைரூஸ் ஆபாதிய் (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் (الهرم) "அல்-ஹரம்" என்ற மூலச்சொல்லில் (الهرمان بناءان أزليان بمصر) "இரண்டு பிரமிட்களானது எகிப்திலுள்ள பழைமைவாய்ந்த இரு கட்டிடங்களாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே அல்லாஹு தபாரக வதஆலா அவனுடைய உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமில்லை எனும் அர்த்தத்தில் அவனே (قديم) "கதீம்"உம், (أزلي) "அஸலிய்யு"மாவான். அவனல்லாதது இரண்டாவது - அதாவது கால நேரம் கடந்து நீண்டு செல்லல் (எனும்)- அர்த்தத்தைக் கொண்டல்லாமல் இவ்வர்த்தத்தைக் கொண்டு அதற்கு (قديم) "கதீம்" என்றோ, (أزلي) "அஸலிய்யு" என்றோ சொல்லப்படமாட்டாது.

குர்ஆனில் (قديم) "கதீம்" என்று இதே வார்த்தையில் அல்லாஹ்விற்கு உபயோகிக்கப்பட்டு வரவில்லை. எனினும் அதன் அர்த்தமே வந்துள்ளது. அல்லாஹு தஆலா ﴿هُوَ الْأَوَّلُ﴾ "அவனே ஆரம்பமற்றவன்" எனக் கூறியுள்ளான். ஏனெனில் அதற்கு நீண்ட காலம் கழிதல் என வியாக்கியானம் செய்வது ஆகுமாகமாட்டாது. ஏனெனில் நீண்ட காலம் கழிதல் என்பது படைப்புகளின் பண்புகளில் ஒரு பண்பாகும். அல்லாஹு தஆலா காலத்திற்கு முன்பே இருந்தான். ஆகையால் அவன் நீண்ட காலம் கழிதல் என்பது கொண்டு வர்ணிக்கப்படமாட்டான்.

*சத்தியவான்கள் கூறுகின்றனர்: (உள்ளமையில்) இருப்பவை மூன்று பங்குகளாகும்.*

- ***முதலாவது பங்கு:***

*பூர்வீகமானதும், நிரந்தரமானதுமாகும். (அதாவது: ஆரம்பமும் முடிவுமற்றது). அது அல்லாஹு தஆலாவும், அவனது பண்புகளும் மாத்திரமேயாகும். மேலும் (அவனுடைய)* (**ذات**) *"தாத்" ஆரம்பமற்றதாக இருப்பதனால் அவனது பண்புகள் யாவும் ஆரம்பமற்றவைகளேயாகும். மேலும் அல்லாஹ்வுடைய தாதிற்கு ஆரம்பமின்மை தரிபட்டிருப்பதனால் அவனுடைய பண்புகளுக்கும் ஆரம்பமின்மை தரிபட்டுவிட்டது.*

*அல்லாஹு தஆலாவினுடைய* (**الأزلية**) *"அஸலிய்யத்"திற்குரிய ஆதாரம் அதே வார்த்தையில் அல்லாமல் சங்கையான குர்ஆனில் பல இடங்களில் வந்துள்ளது.* ﴿وَكَانَ اللَّهُ غَفُورًا رَحِيمًا﴾ *போன்ற அல்லாஹு தஆலாவின் கூற்றைப் போன்று. அதன் அர்த்தம்: "நிச்சயமாக அவன் பூர்வீகத்தில் மன்னிப்பவனாகவும், அருள்புரிபவனாகவும் உள்ளான்" என்பதாகும். அவ்வாறுதான்* ﴿وَكَانَ اللَّهُ عَلِيمًا حَكِيمًا﴾ *எனும் அல்லாஹு தஆலாவின் கூற்றுமாகும்.*

*(**الأزلية**) "அல்-அஸலிய்யத்" குர்ஆனில் (அவ்வார்த்தை கொண்டு) குறிப்பிட்டு வராமலிருப்பினும் அதன் அர்த்தம் சங்கையான குர்ஆனில் பட இடங்களிலும்,* **كان الله ولم يكن شئ غيره** *(அல்லாஹ் அவனன்றி வேறேதும் இல்லாத போது இருந்தான்) என்று முன்குறிப்பிடப்பட்ட*

*புகாரியுடைய ஹதீஸாகிய ஸஹீஹான ஹதீஸிலும் தரிபட்டுள்ளது. இது அறியப்பட்டால், பின்னர் எவர் அழ்ழாஹ் அல்லாத ஏதோ ஒன்றிற்கு (الأزلية) "அல்அஸலிய்யத்"தை (ஆரம்பமின்மையை) வாதிட்டு, இவ்வுலகம் அதனுடைய வகையால் -அதாவது அதன் இனத்தாலும் மற்றும் அதன் பிரிவுகளாலும்- ஆரம்பமற்றது என்பதாகக் கூறினாரோ அவர் காபிராவார். மேலும் எவர் இவ்வுலகம் அதன் இனத்தால் ஆரம்பமற்றது அதன் குறித்த பங்குகளாலல்ல -ஏனெனில் அவை புதிதாகப் படைக்கப்பட்டவையாகும்- எனக் கூறினாரோ அவரும் காபிராவார். இது புதிய (மூல முதற்காரணம் பற்றிய சிந்தனையாளர்களாகிய) பல்ஸபாக்களினது கருத்தாகும்.*

- ***(உள்ளமையில்) இருப்பவையின் இரண்டாவது பங்கு:***

*நிரந்தமானதும், பூர்வீகமற்றதுமாகும். (அதாவது முடிவற்றதும் ஆரம்பமுடையதும்). அது சுவர்க்கமும், நரகமுமாகும்.*

- ***மூன்றாவது பங்கு:***

*பூர்வீகமற்றதும், நிரந்தரமற்றதுமாகும். (அதாவது ஆரம்பமுடையதும், முடிவுடையதும்). அது படைப்புகளிலிருந்து சுவர்க்கம் மற்றும் நரகம் தவிர்ந்தவையாகும். சில அறிஞர்கள் கூறியதன் பிரகாரம் சுவனத்திலுள்ள ஹூர், வில்தான் மற்றும் வேறு சிலதும் அவ்விரண்டுடன் இணைக்கப்படும்.*

*பூர்வீகமான நிரந்தரமற்றது (அதாவது ஆரம்பமில்லாது முடிவு உள்ள ஒரு வஸ்து இருப்பது) என்பது சாத்தியமற்றதாகும். பூர்வீகமானது நிரந்தரமானதாகவே (அதாவது ஆரம்பமில்லாதது முடிவற்றதாகவே) இருக்கும். எனவே அல்லாஹு தஆலா அவனுடைய பண்புகளுடன் பூர்வீகமானவனும் நிரந்தரமானவனுமாவான். அதாவது அவனுடைய பண்புகளும் பூர்வீகமானதும் நிரந்தரமானதுமாகும்.*

## மூன்றாவது பண்பு:
## (البقاء) "அல்-பகாஉ" நிரந்தரம் (முடிவின்மை)

*(البقاء) "அல்-பகாஉ" என்பதன் பொருள் பரிசுத்தமான அவனின் உள்ளமைக்கு எவ்வித முடிவுமில்லை என்பதாகும். ஏனெனில் எதற்கு ஆரம்பமின்மை தரிபட்டுவிட்டதோ அதற்கு முடிவின்மை கட்டாயமாகிவிடும். எனவே இல்லாமை அவன் மீது தடையாகிவிடும். அதாவது இல்லாமை அவனுக்கு சாத்தியமற்றதாகிவிடும்.*

***அழ்ழாஹு தஆலாவிற்கு முடிவின்மை அவசியம் என்பதற்கு அறிவிப்பு ரீதியான ஆதாரம்:*** ﴿وَيَبْقَى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ﴾ *(கண்ணியமும், சங்கையுமுடைய உமது இரட்சகனே நிலைத்திருப்பான்) எனும் அழ்ழாஹு தஆலாவின் கூற்றாகும். இங்கு (وجه) "வஜ்ஹு" என்பதன் அர்த்தம் (ذات) "தாத்" (யதார்த்தம்)* ***என்பதாகும்.***

*இமாம் புகாரி அவர்கள் ﴿كُلُّ شَيْءٍ هَالِكٌ إِلَّا وَجْهَهُ﴾ (என்ற வசனத்திற்கு:) "அனைத்தும் அழிந்துவிடும். அவனது ஆட்சியைத் தவிர" என்றும் மேலும் "அழ்ழாஹ்வினுடைய பொருத்தம் நாடப்பட்டதைத் தவிர" எனச் சொல்லப்படும் என்றும் கூறியுள்ளார்கள்.*

***முடிவின்மைக்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரம்:*** *அழ்ழாஹு தஆலா நிரந்தரமானவனாக இல்லையென்றிருந்தால் இவ் (عالم) "ஆலம்" இருந்திருக்கமாட்டாது. என்றாலும் உறுதியாக இவ் (عالم)*

*“ஆலம்” உள்ளது. எனவே நிச்சயமாக அழ்ழாஹு தஆலா நிரந்தரமானவன் என்பது நிரூபனமாகிவிட்டது **என்று கூறப்படுவதாகும்.***

*அழ்ழாஹ்வுக்கு அவசியமான நிரந்தரம் (முடிவின்மை)* (ذاتي) *“தாதிய்”யான நிரந்தரமேயாகும். அதாவது அவனல்லாத இன்னொன்று அவனுக்கு அதனை அவசியப்படுத்துவதன் மூலமல்ல. மாறாக அவன் அதனை தனக்கே தகுதியாக்கிக்கொண்டுள்ளான். இன்னொன்றின் மூலமாக அல்ல. அழ்ழாஹு தஆலாவின் நிரந்தரம்* (ذاتي) *“தாதிய்”யான (அவனுக்கே உரிய) நிரந்தரமாகும். (எவராலும் உருவாக்கப்பட்டதல்ல). மேலும் இந்த* (ذاتي) *“தாதிய்”யான நிரந்தரம் அவனல்லாத வேறெதற்கும் இருக்கமாட்டாது. இஜ்மாஉவின் மூலம் நிரூபனமான சுவர்க்கம், நரகம் போன்ற அழ்ழாஹு தஆலாவின் படைப்புகளில் சிலவற்றிற்கு இருக்;கும் நிரந்தரம் சொந்தமான நிரந்தமல்ல. ஏனெனில் சுவர்க்கமும், நரகமும் படைக்கப்பட்டவைகளாகும். படைக்கப்பட்டது அதுவாகவே நிலைத்திருக்கமாட்டாது. எனவே சுவர்க்கம், நரகத்தின் நிரந்தரம் அவ்விரண்டிற்குமுரியதல்ல. மாறாக அழ்ழாஹ் அவ்விரண்டிற்கும் நிரந்தரத்தை நாடியிருப்பதனாலாகும்.*

## நான்காவது பண்பு:
## (இணையின்றித்) தனித்திருத்தல்

*அதன் கருத்து நிச்சயமாக அல்லாஹு தபாரக வதஆலாவுக்கு இன்னொருவன் (இணையாளனாக) இல்லை. மேலும் அவன் அர்ஷ், குர்ஸீ, சுவர்க்கம், நரகம், ஏழு வானங்கள், மனிதன், மலக்குமார்கள், ஜின் போன்ற சடப்பொருட்களைப் போன்று இணைக்கப்பட்டவனா கவும், கோர்க்கப்பட்டவனாகவுமில்லை. ஏனெனில் இவை கோர்க்கப்பட்ட சடப்பொருட்களாகும். அதாவது இவை பங்குபெறுவதை ஏற்றுக் கொள்கின்றன. சங்கையான அர்ஷானது பல பாகங்களால் கோர்க்கப்பட்டதாகும். எனவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய ஏனைய ஒரு படைப்பிற்கும் மத்தியில் பொருத்தம் இருப்பது சாத்தியமற்றிருப்பது போன்று அவனுக்கும் அர்ஷ{க்கும் மத்தியில் பொருத்தம் இருப்பது சாத்தியமற்றதாகும்.*

***அவன் (இணையின்றித்) தனித்திருப்பதற்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரம்:*** *பரிசுத்தமான கண்ணியமான அவன் தனித்தவனாக இல்லாமல் பலதாக இருந்திருந்தால் இவ் (عالم) "ஆலம்" சீரானதாக இருந்திருக்கமாட்டாது. என்றாலும் இவ் (عالم) "ஆலம்" சீரானதாக உள்ளது. எனவே நிச்சயமாக அல்லாஹு தஆலா தனித்தவன் என்பது அவசியமாகிவிட்டது* ***என்பதாகும்.***

**மேலும் பரிசுத்தமான அவன் தனித்திருப்பதற்கான அறிவிப்பு ரீதியான ஆதாரம்: அதிகமானதாகும்.** *அவற்றில் நின்றுமுள்ளதுதான்* ﴿قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ﴾ *("(நபியே!) நீர் கூறுவீராக: அவன் அல்லாஹ் ஒருவனே") என்ற அல்லாஹு தஆலாவின் கூற்றாகும்.*

*மேலும் ஹதீஸ்களிலுமிருந்துமுள்ளதுதான் (இமாம்களான) இப்னு ஹிப்பான் மற்றும் இப்னுஸ் ஸுன்னீ (றஹிமஹுமல்லாஹ்) ஆகியோர் அறிவித்த ஒன்றாகும். (அது)* ﷺ *அவர்கள் இரவில் தூங்கி (இடையில்) விழித்தால்* **لا إله إلا الله الواحد القهار رب السموات والأرض وما بينهما العزيز الغفار** *("தனித்து அடக்கியாளக்கூடிய வானங்கள், பூமி மற்றும் அவற்றிற்கு மத்தியிலுள்ளவற்றின் இரட்சகனான, (அனைத்தையும்) மிகைத்தவனான, மிகவும் மன்னிக்கக்கூடிய அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுபவன் வேறு யாருமில்லை") எனக் கூறுவார்கள் (என்பதாகும்).*

## ஐந்தாவது பண்பு:
## தன்னிலே நிலைத்திருத்தல் (பிறரின் பால்தேவைகாணாதிருத்தல்)

அதாவது அனைத்து வஸ்துக்களை விட்டும் தேவையற்றிருத்தல். ஆகவே அல்லாஹு தபாரக வதஆலா அனைத்து வஸ்துக்களை விட்டும் தேவையற்றிருப்பவனாவான். மேலும் அவனைத் தவிரவுள்ள அனைத்து வஸ்துக்களும் அவனின் பால் தேவைகாண்பவையே. எனவே உள்ளமையைக் கொண்டு அவனைக் குறிப்பாக்கக்கூடியவரின் பால் அவன் தேவைகாணமாட்டான். ஏனெனில் நிச்சயமாக பிறரின் பால் தேவை காண்பதென்பது அவனுடைய பூர்வீகத்திற்கு அதாவது ஆரம்பமின்மைக்கு முரணானதாகும். ஏனெனில் பிறரின் பால் தேவைகாண்பதென்பது புதிதாக உருவாவதின் (அதாவது படைப்புகளின்) அடையாளமாகும். அல்லாஹு தபாரக வதஆலாவோ அதனை விட்டும் பரிசுத்தமானவனாவான். எனவே (இதன் மூலம்) அவனுடைய பூர்வீகம் மற்றும் நிரந்தரத்தின் அவசியம் நிரூபனமாகிவிட்டது.

எனவே அல்லாஹு தபாரக வதஆலா வழிபடக்கூடியவர்களின் வழிபாட்டின் மூலம் பயனடையவோ மற்றும் பாவிகளின் பாவத்தின் மூலம் தீங்கடையவோமாட்டான். மேலும் அல்லாஹ்வைத் தவிரவுள்ள அனைத்து வஸ்துக்களும் அல்லாஹ்வின் பால் தேவைகாண்பவையே. கண் சிமிட்டுமளவு கூட அவை அல்லாஹ்வை விட்டும்

தேவையற்றிருக்கமாட்டாது. அல்லாஹு தஆலா ﴿وَاللَّهُ الْغَنِيُّ وَأَنْتُمُ الْفُقَرَاءُ﴾ "(அல்லாஹ்வே தேவையற்றவன். நீங்களோ தேவைகாண்பவர்கள்)" எனக் கூறியுள்ளான்.

## ஆறாவது பண்பு:
## அவன் படைப்புகளுக்கு மாற்றமாயிருத்தல்

*அதாவது அவன் படைப்புகளுக்கு ஒப்பாகமாட்டான். இதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரம்: அவன் அவனுடைய படைப்புக்களில் ஏதாவதொன்றுக்கு ஒப்பாகுபவனாக இருந்திருந்தால் மாற்றம், வளர்ச்சி, அழிவு ஆகிய படைப்புக்களின் மீது சாத்தியமாகுபவை அவனின் மீதும் சாத்தியமாகிவிடும். அவை அவனின் மீது சாத்தியமாகிவிட்டால் அவன் அவனை மாற்றக்கூடியவனின் பால் தேவைகண்டுவிடுவான். பிறரின் பால் தேவைகாண்பவன் (ஒருபோதும்) கடவுளாக இருக்கமாட்டான். எனவே நிச்சயமாக அவன் எதற்கும் ஒப்பாக மாட்டான் என்பது நிரூபனமாகிவிட்டது என்பதாகும்.*

***மேலும் அவன் படைப்புகளுக்கு மாற்றமாயிருத்தல் அவசியம் என்பதற்கான அறிவிப்பு ரீதியான ஆதாரத்தில் நின்றுமுள்ளதுதான்:*** ﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ﴾ *(எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை) என்ற அல்லாஹு தஆலாவின்* ***கூற்றாகும்.*** *இதுவானது இவ்விடயத்தில் குர்ஆனில் வந்துள்ள மிகவும் தெளிவான அறிவிப்பு ரீதியான ஆதாரமாகும். ஏனெனில் இவ்வசனம்* (التنزيه الكلي) *“அத்தன்ஸீஹுல் குல்லீ” (அதாவது படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் அல்லாஹ்வை) முழுமையாக பரிசுத்தப்படுத்துவதை விளங்கப்படுத்துகிறது. ஏனெனில் அதிலே எதிர்மறைத்தொடரில் அல்லாஹு*

தபாரக வதஆலா (شيء) "ஷய்உ" என்ற வார்த்தையைக் குறிப்பிட்டுள்ளான். பொதுப்படைச்சொல் எதிர்மறைத்தொடரில் கொண்டுவரப்பட்டால் அது (அனைத்தையும்) உள்ளடக்கிக்கொள்வதற்காக வாகும். எனவே இவ்வாக்கியத்தின் மூலம் அல்லாஹு தபாரக வதஆலா பெறுமானங்கள், சடங்கள் மற்றும் பண்புகளுக்கு ஒப்பாகுவதைத் தன்னை விட்டும் நீக்கியுள்ளான். ஆகவே பரிசுத்தமான, கண்ணியமான அவன் மனிதன், ஜின், மலக்குமார்கள் மற்றும் இவர்களல்லாத உயிருள்ளவர்களுக்கு ஒப்பாகாமல் இருப்பது போன்று மேலோக, கீழோக பெறுமானங்களிலில் நின்றுமுள்ள திண்மப் பொருட்களுக்கும் ஒப்பாகமாட்டான். அவன் அவற்றில் எதற்கும் ஒப்பாகமாட்டான். எனவே அல்லாஹு தபாரக வதஆலா உவமையை அவனை விட்டும் நீக்கியதைப் படைப்பினங்களின் வகைகளில் எந்தவொரு வகையைக் கொண்டும் வரையறுத்துக் கூறவில்லை. மாறாக படைப்புக்களில் எந்தவொன்றுக்கும் அவன் ஒப்பாகாமலிருப்பதைப் பொதுப்படையாக்கிக் கூறியுள்ளான்.

மேலும் இந்த எதிர்மறை; பருமன் மற்றும் விதத்தை விட்டும் அவனைத் தூய்மைப்படுத்துவதைப் பொதிந்துகொள்கிறது. ஏனெனில் "பருமன்" சடத்தின் அளவாகும். அதாவது பரிசுத்தமான கண்ணியமிக்க அவன் அளவு, பரப்பளவு மற்றும் எல்லை நுழைந்துவிடக்கூடிய சடம் போன்று இல்லை. எனவே அவன் அளவு, தூரம் கொண்ட எல்லைக்குட்பட்டவனாக இல்லை. எவரொருவர் அல்லாஹு தஆலாவுடைய விடயத்தில் அவனுக்கு ஒரு எல்லை இருப்பதாகக் கூறுகிறாரோ நிச்சயமாக அவர் அவனை அவனுடைய

படைப்புக்கு ஒப்பாக்கிவிட்டார். ஏனெனில் அது தெய்வீகத்துக்கு முரண்படுகின்றது.

மேலும் அல்லாஹு தபாரக வதஆலா எல்லை, அளவு உடையவனாக இருந்திருந்தால் அந்த எல்லை மற்றும் அளவில் அவனை அமைத்தவனின் பால் அவன் தேவைகண்டிருப்பான். சடங்கள் அவற்றை எல்லைகள் மற்றும் அளவுகளில் அமைத்தவனின் பால் தேவைகாண்பதைப் போல. ஏனெனில் ஒரு பொருள் தன்னையே அதன் அளவில் படைத்துக் கொள்ளமாட்டாது. எனவே அல்லாஹு தபாரக வதஆலா சடங்களைப் போன்று எல்லை மற்றும் அளவுடையவனாக இருந்திருந்தால் அவ்வளவில் அவனை அமைத்தவனின் பால் தேவைகண்டிருப்பான். ஏனெனில் அவன் அவ்வளவில் தன்னையே அமைத்தான் என்பது பகுத்தறிவில் சாத்தியமாகமாட்டாது. மேலும் பிறரின் பால் தேவைகாண்பவன் கடவுளாக இருக்கமாட்டான். ஏனெனில் அனைத்து வஸ்துக்களை விட்டும் தேவையற்றிருப்பது தெய்வீகத்தின் நிபந்தனையிலுள்ளதாகும்.

## ஏழாவது பண்பு:
## மரணமில்லாதிருத்தல்

*அல்லாஹு தஆலாவுடைய விடயத்தில் மரணமின்மை என்பது உயிர், சதை, இரத்தம் கொண்ட அவனல்லாதோரின் வாழ்வைப் போன்றல்லாத பூர்வீகமான நிரந்தரமான (ஆரம்பமும் முடிவுமற்ற) ஒரு பண்பாகும்.*

***பரிசுத்தமான அவன் மரணமில்லாதவனாக இருப்பதற்குரிய பகுத்தறிவு ரீதியான ஆதாரம்:*** *அவன் மரணமற்றவனாக இருக்கவில்லையென்றிருந்தால் வல்லமை, நாட்டம், அறிவு கொண்டு வர்ணிப்புப் பெற்றிருக்கமாட்டான். அல்லாஹு தஆலா இந்தப் பண்புகளைக் கொண்டு வர்ணிப்புப் பெறாதவனாக இருந்திருந்தால் எதிர்மறையைக் கொண்டு வர்ணிப்புப் பெற்றவனாக இருந்திருப்பான். அது ஒரு குறையாகும். அல்லாஹ் குறையை விட்டும் பரிசுத்தமானவனாவான் என்பதாகும்.*

*பரிசுத்தமான அவன் மரணமில்லாதிருப்பது அவசியம் என்பதை அறிவிக்கக்கூடியதில் நின்றுமுள்ளதுதான் இவ் "ஆலம்" இருப்பதாகும். அவன் மரணமற்றவனாக இருக்கவில்லையென்றிருந்தால் ஆலத்தில் எந்தவொன்றும் இருந்திருக்கமாட்டாது. என்றாலும் ஆலம் இருப்பது எவ்வித சந்தேகமுமின்றி புலன் மற்றும் நிர்ப்பந்தத்தின் மூலம் நிரூபனமானதாகும்.*

***மரணமின்மைக்கான அறிவிப்பு ரீதியான ஆதாரம்: பல வசனங்களாகும்.*** *அவற்றில் நின்றுமுள்ளதுதான் ﴿اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْحَيُّ﴾ வழிபடுவதற்குத் தகுதியானவன் எவருமில்லை. அவனே மரணமில்லாதவன்.) என்ற அல்லாஹு தஆலாவின் கூற்றாகும்.*

## எட்டாவது பண்பு:
# வல்லமை

*அது அல்லாஹு தஆலாவின் (جل) "தாத்"இற்கு தரிபாடான பூர்வீகமான (ஆரம்பமற்ற) ஒரு பண்பாகும். மேலும் ((அல்லாஹு தஆலாவுடைய "தாத்"இற்கு நிலையானது)) என்றும் சொல்லப்பட முடியும். ஏனெனில் (அவ்விரண்டினதும்) அர்த்தம் ஒன்றாகும். என்றாலும் ((அல்லாஹ்வுடைய "தாத்"இல் தரிபட்டது)) என்று சொல்லப்படமாட்டாது. வல்லமையின் மூலம் உண்டுபண்ணவும், இல்லாமலாக்கவும் முடியும். அதாவது அதன் மூலம் இல்லாமையிலிருந்து இல்லாததை உண்டுபண்ணுவான். மேலும் அதன் மூலம் உள்ளதை இல்லாமலாக்குவான்.*

*அல்லாஹு தஆலாவிற்கு அப்பண்பு அவசியம் என்பதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரம்: அவன் வல்லமையுடையவனாக இருக்கவில்லையென்றிருந்தால் இயலாதவனாக இருந்திருப்பான். அவன் இயலாதவனாக இருந்திருந்தால் படைப்புகளில் எதுவும் உண்டாகியிருக்கமாட்டாது. (எனினும்) படைப்புகள் பார்க்கப்படக்கூடியதாக உள்ளன. இன்னும் இயலாமை குறையாகும். குறையோ அல்லாஹ்வுக்கு சாத்தியமற்றதாகும். ஏனெனில் பரிபூரணம் கடவுளின் நிபந்தனையிலுள்ளதே என்பதாகும்.*

*அறிவிப்பு ரீதியான ஆதாரம்: சங்கையான குர்ஆனிலே அல்லாஹு தஆலாவுக்குரிய "வல்லமை" எனும் பண்பின் பிரஸ்தாபம் பல இடங்களில்*

வந்துள்ளது. ﴿إِنَّ اللَّهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِينُ﴾ (நிச்சயமாக அழ்ழாஹ் தேவைகளை நிறைவேற்றுபவனும், வல்லமையுடையோனும், உறுதிமிக்கவனுமாவான்) என்ற பரிசுத்தமான அவனின் கூற்றைப் போன்று. (இவ்வசனத்திலுள்ள (القوة "அல்-குவ்வத்"தே வல்லமையாகும். இன்னும் ﴿وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ﴾ (அவனோ அனைத்தின் மீதும் வல்லமைமிக்கவனாவான்) என்ற பரிசுத்தமான அவனின் கூற்றையும் போன்று.

மேலும் "வல்லமை"யாகிறது எவை உண்டாகுவதை பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளுமோ அவற்றோடுதான் சம்மந்தப்படும். அவையே الممكنات العقلية) -"அல்-மும்கினாதுல் அக்லிய்யஹ்") "பகுத்தறிவு ரீதியான சாத்தியமானவை"யாகும். இன்னொரு வாசகத்தின் மூலம் الجائزات العقلية)-"அல்-ஜாஇஸாதுல் அக்லிய்யஹ்") "பகுத்தறிவு ரீதியான ஆகுமானவை" என்றும் கூறப்படும். எனவே (قدرة) "குத்ரத்" الواجب العقلي) - "அல்-வாஜிபுல் அக்லிய்யு") "பகுத்தறிவு ரீதியான அவசியமானது"டனும் மற்றும் المستحيل العقلي) -"அல்-முஸ்தஹீலுல் அக்லிய்யு") "பகுத்தறிவு ரீதியான சாத்தியமற்றது"டனும் அதாவது உள்ளமையை ஏற்றுக்கொள்ளாததுடனும் சம்மந்தப் படமாட்டாது. இதனால்தான் "அழ்ழாஹ் தன்னைப் போன்ற ஒருவனைப் படைப்பதற்கு" அல்லது "தன்னை இல்லாமலாக்குவதற்கு சக்தியுள்ளவனா?" என்று கேட்கப்படுவது தடையாகின்றது. அத்துடன் அவன் அவற்றை விட்டும் இயலாதவன் என்றும் சொல்லப்படமாட்டாது.

## ஒன்பதாவது பண்பு:
## நாட்டம்

*“நாட்டம்” எனப்படுவது அல்லாஹ்வின் (**ذات**) “தாத்”இற்கு நிலையான அதாவது அவனுடைய “தாத்”இற்கு தரிபாடான பூர்வீகமான (ஆரம்பமற்ற) பண்பாகும். அதன் மூலம் பகுத்தறிவு ரீதியான சாத்தியமானதை ஒரு பண்பன்றி மற்றொரு பண்பு கொண்டு குறிப்பாக்குகின்றான். ஏனெனில் பகுத்தறிவு ரீதியான சாத்தியமானவை இல்லாமலிருந்தன. பின்னர் அல்லாஹு தஆலா அவை உண்டாகுவதை குறிப்பாக்கியதனால் உள்ளமையில் நுழைந்தன. ஏனென்றால் பகுத்தறிவிலே அவை உண்டாகாமலிருப்பது ஆகுமாக இருந்தது. எனவே அவை உண்டாகியது அல்லாஹு தஆலா குறிப்பாக்கியதன் மூலமேயாகும். அல்லாஹு தஆலாவின் குறிப்பாக்கம் இல்லையென்றிருந்தால் பகுத்தறிவு ரீதியான சாத்தியமானவற்றில் எவ்வொன்றும் இருந்திருக்க மாட்டாது. எனவே உள்ளமையில் நுழைந்துவிட்ட ஒவ்வொன்றையும் அவை இல்லாமையில் இருப்பதற்கு பதிலாக உண்டாகுவது கொண்டும் வேறொன்றல்லாமல் அவை எப்பண்பிலுள்ளதோ அது கொண்டும் அல்லாஹு தஆலா குறிப்பாக்கினான் என்பது இதிலிருந்து அறியப்படுகின்றது.*

*மனிதன் அவனது தோற்றம் மற்றும் அவன் அமைந்திருக்கும் வடிவம் ஆகியவற்றைக் கொண்டு*

குறிப்பானது அல்லாஹு தஆலா குறிப்பாக்கியதன் மூலமே உண்டாகியதாகும். ஏனெனில் மனிதன் (அவனிருக்கும்) இப்பண்பல்லாததன் மீதும் மேலும் இவ்வடிவமல்லாததன் மீதும் ஆகியிருப்பது பகுத்தறிவில் ஆகுமானதாக இருந்தது. பின்பு மனிதன் அவன் உண்டாகி இருக்கும் நேரத்திலே உண்டாகுவது கொண்டு குறிப்பானதானது அது அல்லாஹு தஆலாவிடமிருந்தேயாகும். ஏனெனில் அவன் நாடியிருந்தால் மனிதனை உலகின் ஆரம்பமானதாக ஆக்கியிருப்பான். என்றாலும் அவனை உலகின் ஆரம்பமானதாக ஆக்கவில்லை. மாறாக அவனை உலகின் இறுதியாக ஆக்கியுள்ளான். எனவே எங்களில் ஒருவர் அவரை அவரே இத்தோற்றத்தில் உருவாக்கிக் கொள்ளவில்லை என்றும், அவர் உண்டாகியிருக்கும் காலத்தில் அவரையே அவர் உருவாக்கிக் கொள்ளவில்லை என்றும் அறிவார். ஆகவே அவை குறிப்பாக்கியவனின் குறிப்பாக்குதலின் மூலம் உண்டாகியிருப்பது கட்டாயமாகிவிட்டது. அவனே பூர்வீகமான உள்ளமைகொண்ட "அல்லாஹ்" என்றழைக்கபடுபவனாவான்.

**அல்லாஹ்விற்கு "நாட்டம்" அவசியம் என்பதற்கான அறிவிப்பு ரீதியான ஆதாரம்: அதிகமானதாகும்.** அவற்றில் நின்றுமுள்ளதுதான் ﴿فَعَّالٌ لِمَا يُرِيدُ﴾ அதாவது கண்ணியமான பரிசுத்தமான அவன் அவனது பூர்வீகமான நாட்டத்தின் மூலம் படைப்புகளை உருவாக்கின்றான், செய்கின்றான் என்ற பரிசுத்தமான அவனின் கூற்றாகும்.

## பத்தாவது பண்பு:
## அறிவு

*அறிவென்பது அழ்ழாஹு தஆலாவிற்கு தரிபாடான, பூர்வீகமான (ஆரம்பமற்ற) ஒரு பண்பாகும். "அழ்ழாஹ்வில் (தரிபாடானது)" என்று சொல்லப்படமாட்டாது. ஏனெனில் "இல்" என்பதைக் கொண்டு வாசகம் இடுவதானது (ظرفية) "ழர்பிய்யத்"தை அதாவது அழ்ழாஹு தஆலாவின் "தாத்" அவனது அறிவிற்குரிய ஓர் இடமாகும் என்பதை யூகிக்கச்செய்கின்றது. இதுவுமோ (அவன் விடயத்தில்) சாத்தியமற்றதாகும். ஏனெனில் அழ்ழாஹு தஆலா தன்மை சங்கமிக்கும் சடமாக இல்லை. எங்களுடைய செயல் எங்கள் உடம்புகளில் சங்கமிக்கும் தன்மையாகும். அது அழ்ழாஹு தஆலாவிற்கு சாத்தியமற்றது. எனவே இவ்வாசகத்தைக் கொண்டு வாசகமிடுவது எவருக்கும் ஆகுமாகமாட்டாது. ஏனெனில் அது நாசத்தின் பால் இட்டுச்செல்லும் ஒரு தவறாகும்.*

*இக்கலையானது வாசகங்களில் பேணுதலை கடைபிடிப்பதற்கு அறிவுகளில் மிகத் தகுதியானதாகும். ஏனெனில் இது மார்க்கத்தின் அடிப்படையுடன் சம்மந்தப்படுவதனால் அறிவுகளில் மிகச் சிறப்பானதாகும். இதனால்தான் (இமாம்) அபூ ஹனீபா (றஹிமஹுழ்ழாஹ்) அவர்கள் அதற்கு (الفقه الأكبر) "அல்-பிக்ஹுல் அக்பர்" (மிகப்பெரும் அறிவு ஞானம்) என்று பெயர் சூட்டியுள்ளார்கள். மேலும் அது (علم التوحيد)*

*“இல்முத் தவ்ஹீத்” (ஓரிறைக் கொள்கையறிவு) மற்றும் (علم الكلام) “இல்முல் கலாம்”[3] என்றும் அறியப்படுகிறது.*

*அஹ்லுஸ்ஸுன்னஹ்கள் “இல்முல் கலாம்” என பெயர் சூட்டிய இது, புகழப்பட்ட கலாமேயாகும். இகழப்பட்ட கலாம் என்பது அது “அஹ்லுல் அஹ்வாஃ”களின் அதாவது -முஃதஸிலாக்களைப் போன்ற- நம்பிக்கை சார்ந்த பித்அத்வாதிகளின் கலாமாகும். இதனையே ஸலபுகள் இகழ்ந்துள்ளார்கள். இமாம் ஷாபிஈ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் “ஷிர்கைத் தவிர்ந்த அனைத்துப் பாவங்களுடன் அடியான் அழ்ழாஹ்வை சந்திப்பது (அதாவது மரணிப்பது) “அஹ்லுல் அஹ்வாஃ”களின் கலாமுடன் அவனை சந்திப்பதை (அதாவது மரணிப்பதை) விட மிக இலகுவானதாகும்” எனக் கூறினார்கள்.*

*இதற்கும் அதற்கும் மத்தியிலுள்ள வித்தியாசம்: அஹ்லுஸ்ஸுன்னஹ்கள் கோர்வை செய்த நூற்களில் இருக்கும் அவர்களுக்குரிய இல்முல் கலாமாகிறது அது பித்அத்வாதிகளான நாஸ்திகர்களின் போலி ஆதாரங்களையும் மேலும் அவர்களின் சந்தேகங்களை உண்டுபண்ணக்கூடியவைகளையும் மறுப்பதுடன் இணைக்கப்பட்டதான அறிவிப்பு மற்றும் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களைக் கொண்டு ஸலபுகளின் அகீதாவை உறுதிப்படுத்துவதேயாகும்.*

---

[3] *அழ்ழாஹ்வுடைய “பேச்சு” தொடர்பாக அஹ்லுஸ்ஸுன்னஹ்களின் கொள்கைக்கு முரணானவர்கள் அதிகமாக இருந்ததனாலும், அனைத்து பிரிவினரும் அவரவர் கொள்கையை பாதுகாப்பதற்காக அது தொடர்பான பேச்சு நீடித்திருந்ததாலும் அதற்கு இல்முல் கலாம் என பெயரிடப்பட்டது.*

*சத்தியவான்களுக்கு அதில் பெரும் முக்கியத்துவம் இருக்கின்றது. அதனால்தான் (இமாம்) அபூ ஹனீபா (றஹிமஹுுல்லாஹ்) அவர்கள் கூபாவிலிருந்து பஸ்ராவுக்கு அவர்களுடைய (அதாவது பித்அத்வாதிகளுடைய) போலி ஆதாரங்களையும், மாயக்கருத்துக்களையும் முறியடிப்பதற்காக பிரயாணம் செய்பவர்களாக இருந்தார்கள். இதற்காக அவர்கள் இருபதுக்கும் அதிகமான தடவைகள் (அங்கு) போய் வந்துள்ளார்கள். கூபாவுக்கும் பஸ்ராவுக்குமிடையில் நீண்ட தொலைதூரமுள்ளது. அவர்களின் போலி ஆதாரங்கள் மற்றும் மாயக்கருத்துக்கள் பிழையானது என்பதை தெளிவுபடுத்தி, தர்க்கத்தின் மூலம் அவர்களை வாயடைக்கச் செய்பவர்களாக இருந்தார்கள். அதை (அதாவது இல்முல் கலாமை) முஷப்பிஹாக்கள் (அழ்ழாஹ்வை படைப்பினங்களுக்கு ஒப்புவமை செய்பவர்கள்) மற்றும் அவர்களைப் போன்றோர்களில் யதார்த்தத்தை அறியாதவரே குறைகூறுவார். ஏனெனில் அழ்ழாஹ்வின் பண்புகள் தொடர்பாக வந்துள்ள "முதஷாபிஹத்"தான (பல பொருள்களுக்கு இடம்பாடான) வசனங்களை மற்றும் "முதஷாபிஹத்"தான ஹதீஸ்களை அதன் வெளிரங்கங்களின் மீது சுமத்தாட்டக்கூடிய முஷப்பிஹாக்கள் இந்தக் கல்வியின் எதிரிகளாவார்கள்.*

*இவர்களுடைய விடயத்திலே ஒருவர் கூறியுள்ளார்.
அவர் கூறியதில் உண்மை உரைத்துவிட்டார்.*

*புத்திகளற்ற சில மனிதர்கள் இல்முல் கலாமை
குறைகூறுகின்றனர்.*

*அவர்கள் அதனைக் குறை கூறுவதால் அதற்கு எந்தத் தீங்குமில்லை.*

*அடிவானத்தில் உதயமாகிய காலைச் சூரியனுக்குத் தீங்கிழைக்காது*

*பார்வையற்றவர் அதனைப் பார்க்காதது.*

"ஷிர்க்கைத் தவிரவுள்ள அல்லாஹ் தடுத்த அனைத்தைக் கொண்டும் ஒரு மனிதன் சோதிக்கப்படுவது (இல்முல்) கலாமைக் கொண்டு அல்லாஹ் அவரை சோதிப்பதை விட சிறந்ததாகும்." என (இமாம்) ஷாபிஈ (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டதாகிறது அதன் நாட்டம் -சில அறிவிப்புக்களில் தெளிவுபடுத்தப்பட்டதாக வந்திருப்பதைப் போன்று- பித்அத்வாதிகளின் கலாமாகும் என (இமாம்) பைஹகீ (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சத்தியவான்கள் அல்லாஹு தஆலாவிற்கு "அறிவு" எனும் பண்பை தரிபடுத்துவதில் ஓர் ஆதாரமெடுப்பை குறிப்பிட்டுள்ளார்கள். (அது) பரிசுத்தமான அவன் அறிவாளியாக இல்லையென்றிருந்தால் அறியாதவனாக இருந்திருப்பான். அறியாமையோ குறையாகும். அல்லாஹ் குறையை விட்டும் பரிசுத்தமானவன் (என்பதாகும்). இன்னும் அவன் ஒரு விடயத்தையேனும் அறியாதவனாக இருந்திருந்தால் இவ்"ஆலம்" இருக்கமாட்டாது. எனவே இவ்"ஆலம்" இருப்பது பார்க்கப்படக்கூடியதும் உண்மையில் நிரூபனமானதுமாகும். அல்லாஹு தஆலாவின் விடயத்தில் மடமை ஆலத்தின் உள்ளமையின்மையின்

*பால் இட்டுச்செல்லும். அது சாத்தியமற்றதாகும். சாத்தியமற்றதின் பால் இட்டுச் செல்வதும் சாத்தியமற்றதேயாகும்.*

***அறிவிப்பு ரீதியின் புறத்தில் (அதன்) ஆதாரங்கள்: அதிகமானதாகும்***. ﴿ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ﴾ *(அவன் அனைத்தையும் நன்கறிந்தவன்) எனும் பரிசுத்தமான அவனின் கூற்றையும்,* ﴿أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ اللَّطِيفُ الْخَبِيرُ﴾ *((அவன் நுட்பமானவனாகவும், நன்கறிந்தவனாகவும் இருக்கையில் படைத்த அவன் (நெஞ்சங்களில் உள்ளவற்றை) அறியமாட்டானா?!)) எனும் அவனின் கூற்றையும் போன்று. (இறுதி) வசனத்தில் அவன் அறிவுள்ளவனாக இல்லையென்றிருந்தால் இப்படைப்பை படைத்திருக்கமாட்டான் என்பதற்கான ஆதாரம் உள்ளது.*

## பதினொராவது பண்பு:
## கேட்டல்

*அது அழ்ழாஹ்வுடைய "தாத்"இற்கு நிலையான அதாவது அதற்கு தரிபாடான, பூர்வீகமான (ஆரம்பமற்ற), கேட்கப்படக் கூடியவற்றுடன் சம்மந்தப்படக்கூடிய ஒரு பண்பாகும். மேலும் "அது சத்தங்கள் மற்றும் அவையல்லாத இருக்கக்கூடிய அனைத்துடனும் சம்மந்தப்படும்" எனப் பின்வந்த சில அறிஞர்கள் கூறியுள்ளார்கள்:*

*பரிசுத்தமான அவனின் "கேட்டல்" (எனும் தன்மை) அவனுடைய படைப்புகளின் "கேட்டல்" போன்ற புதிதாக உருவாக்கப்பட்டதாக இருக்க முடியாது. மேலும் அது எங்களது "கேட்டல்" போன்று ஒரு கருவியைக் கொண்டதாகவும் இருக்க முடியாது. எனவே அவன் எவ்வித செவியோ, செவிக்குழாயோ இன்றி கேட்கின்றான். தன்ஸீஹு[4]டைய கல்வியைக் கற்காத அதாவது முன்வாழ்ந்த அறிஞர்களிடமிருந்து கற்ற அறிவுடையோர்களிடமிருந்து மார்க்க அறிவை விளங்கிக் கற்காது, குர்ஆனை மனனமிடுவதோடு மாத்திரம் சுருக்கிக்கொண்ட ஒருவர் வழிதவறிவிட்டார். ஏனெனில் அவர் "அழ்ழாஹ்வுக்கு காதுகள் உண்டு" என்பதாக கூறியுள்ளார். எனவே அவரிடம் அது எவ்வாறு என வினவப்பட்டது? அதற்கவர் : நபி ﷺ அவர்கள் لَلهُ أشد ءاذانا (அழ்ழாஹ் கூரிய காதுகளுடையவன்) என்று*

---

[4] *படைபினங்களுக்கு ஒப்பாவதை விட்டும் அழ்ழாஹ்வை பரிசுத்தப்படுத்தல்.*

கூறவில்லையா? என்று கூறினார். எனவே அவருக்கு "நீங்கள் ஹதீஸை மாற்றியமைத்துவிட்டீர்கள்" எனக் கூறப்பட்டது. ஆனால் (ஹதீஸில்) வந்துள்ளதோ أَذَنًا என்பதாகும் إذانا என்பதல்ல. அவர் தன்னையே அறிஞரென எண்ணி, அதுதான் சரி என அவர் கருதி இந்த ஹதீஸை மாற்றியமைக்கத் துணிந்துள்ளார். (அறபு) மொழியில் أَذَن என்பது செவிமடுத்தல் என்பதாகும். இந்த மனிதரின் கூற்று அல்லாஹ்வின் மீதான மிக மோசமான பொய்களிலுள்ளதாகும். இவ்வாறு எந்தவொரு முஷப்பிஹும் கூறியதில்லை.

எனவே அல்லாஹு தஆலாவுடைய "கேட்டல்" எனும் பண்பு பூர்வீகமானதாகும். மேலும் சத்தத்தினூடாக அவனால் கேட்கப்படக்கூடியவையானது புதிதாக உருவாக்கப்பட்டவையாகும். எனவே பரிசுத்தமான அவன் பூர்வீகமான நிரந்தரமான அதாவது அதன் உள்ளமைக்கு ஆரம்பமும், முடிவுமற்ற அவனது கேள்வி மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட இச்சத்தங்களை கேட்கின்றான். மேலும் அது ஏனைய பண்புகளைப் போன்றே நிலையானதும், முடிவற்றதுமாகும். இது "அல்லாஹ்வின் வல்லமை புதிதாக உருவாக்கபட்டவற்றுடன் அதாவது பகுத்தறிவு ரீதியான சாத்தியமானவற்றுடன் சம்மந்தப்படக் கூடியதாகும்" என்று அவர்கள் கூறியதைப் போன்றாகும். "வல்லமை" பூர்வீகமானதாகும். (வல்லமையினால்) ஏற்படுத்தப்பட்டவற்றிற்கு மாற்றமாக ஏனெனில் அவை புதிதாக உண்டாக்கப்பட்டவையாகும்.

*மாதுரீதிய்யாக்களின் மத்ஹபின் பிரகாரம்: அவன் பூர்வீகமான அவனது تكوين) "தக்வீன்" எனப்படும்) உருவாக்கத்தினால் படைப்பை உருவாக்குபவன் என்றும், அவனால் உருவாக்கப்பட்டவை படைக்கப்பட்டதாகும் என்றும் சொல்லப்படும்.*[5]

***பகுத்தறிவில் "கேள்வி" அவனுக்கு அவசியம் என்பதற்கான ஆதாரம்:*** *அவன் கேட்பது கொண்டு வர்ணிப்புடையவனாக இருக்கவில்லை யென்றிருந்தால் செவிடைக் கொண்டு வர்ணிப்புடையவனாக இருந்திருப்பான்* ***என்பதாகும்.*** *அது அழ்ழாஹ்வுக்கு குறையாகும். குறை அவனுக்கு சாத்தியமற்றதேயாகும்.*

***அதற்கு அறிவிப்பு ரீதியிலான ஆதாரங்கள்: அதிகமானவையாகும்.*** *அவற்றில் நின்றுமுள்ளதுதான்* ﴿وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ﴾ *(அவன் கேட்பவனும், பார்ப்பவனுமாவான்) என்ற பரிசுத்தமான அவனது கூற்றும்,* ﴿قَدْ سَمِعَ اللَّهُ قَوْلَ الَّتِي تُجَادِلُكَ فِي زَوْجِهَا﴾ *(தன் கணவனைப் பற்றி உம்மிடம் தர்க்கித்தவளின் பேச்சை அழ்ழாஹ் திட்டமாகக் கேட்டான்) எனும் அவனது கூற்றுமாகும்.*

---

5 *மாதுரீதிய்யஹ்களின் "தக்வீன்" பற்றி நூலாசிரியர் பக்கம் 69ல் விளக்குவார்.*

## பன்னிரெண்டாவது பண்பு:
## அல்-பஸர்

*அதன் கருத்து "பார்வை" என்பதாகும். பார்வை பூர்வீகமான, நிரந்தரமான (ஆரம்ப, முடிவற்ற) பார்க்கப்படக்கூடியவற்றுடன் சம்மந்தப்படும் ஒரு பண்பாகும். எனவே பரிசுத்தமான கண்ணியமான அவன் அவனது பூர்வீகமான பார்வையினால் அவனது பூர்வீகமான (ذات) "தாத்"தையும் பார்க்கின்றான். படைப்புகளையும் பார்க்கின்றான். இன்னும் அவனது பார்வை அவனது படைப்புகளின் பார்வையைப் போன்றல்ல. ஏனெனில் அவனது படைப்புகளின் பார்வை கண் எனும் கருவியினாலாகும்.*

***பகுத்தறிவு ரீதியில் அவனுக்கு பார்வை நிரூபனமானது என்பதற்கான ஆதாரம்:*** *பரிசுத்தமான கண்ணியமான அவனுக்குப் பார்வையில்லாமலிருப்பின் அதற்கு முரணானதைக் கொண்டு வர்ணிப்புப் பெற்றிருப்பான். அதுதான் குருடாகும். அதாவது பார்வையின்மையாகும். அது குறையாகும். குறையோ அழ்ழாஹ்வுக்கு சாத்தியமற்றதே* ***என்பதாகும்.***

***பார்வைக்குரிய அறிவிப்பு ரீதியான ஆதாரம்: பல வசனங்களும், நிரூபனமான ஹதீஸ்களுமாகும்.*** ﴿وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ﴾ *(அவன் கேட்பவனும், பார்ப்பவனுமாவான்) எனும் அழ்ழாஹு தஆலாவுடைய கூற்றையும் மேலும் அழ்ழாஹ்வுடைய அழகிய திருநாமங்களைக் கணக்கிடுகையில்* **السميع البصير** *(கேட்பவன் பார்ப்பவன்)*

*என்ற நபி ﷺ அவர்களின் கூற்றையும் போன்றதாகும். இது (இமாம்) திர்மிதி (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் அறிவித்த ஹதீஸிலே உள்ளது. அதனை (இமாம்) ஸுயூத்தீ (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஹஸனாக்கியுள்ளார்கள்.*

## பதின்மூன்றாவது பண்பு: பேச்சு

*அல்லாஹு தஆலாவுக்கு "பேச்சு" அவசியமானதாகும். அது படைப்பினங்களுடைய பேச்சுக்கு ஒப்பாகாத, பூர்வீகமான, நிரந்தரமான (ஆரம்பமும், முடிவுமற்ற) ஒரு பண்பாகும். மேலும் அதற்கு "குர்ஆன்" என்றும் மற்றும் இறக்கப்பட்ட வேதங்களில் அதுவல்லாதது (அதாவது: தவ்றாத், ஸபூர், இன்ஜீல்) என்றும் வாசகமிடப்படும். மேலும் படைப்பினங்களுடைய பேச்சு படைக்கப்பட்டதாகும். எனவே மனிதனுடைய பேச்சானது (எழுத்துகள்) வெளியாகும் தளங்கள் மற்றும் (அவற்றின்) பகுதிகள் மீது அமைந்திருக்கும் சத்தமாகும். மேலும் சத்தங்களில் நின்றுமுள்ளதுதான்: பாறையின் மேல் இரும்பு இழுக்கப்படும்போது (ஏற்படும்) அதன் சத்தத்தைப் போல் இரு சடங்கள் மோதிக்கொள்கையில் உருவாகும் ஒன்றாகும். இறக்கப்பட்ட இந்த வேதங்கள் (அல்லாஹ்வுடைய ذاتي) தாதிய்யத்தான (அதாவது தாதிற்கு தரிபாடான) பேச்சேயல்ல. மாறாக அவை அதைத் தொட்டும் (அறிவிக்கும்) வாசகங்களேயாகும்.*

***பகுத்தறிவு ரீதியின் புறத்தில் அதற்குரிய ஆதாரம்:*** *அவன் பேசக்கூடியவனாக இருந்திருக்கவில்லையென்றால் ஊமை யானவனாக இருந்திருப்பான். ஊமையோ குறையாகும். அது அல்லாஹ்வுக்கு சாத்தியமற்றதே* ***என்பதாகும்.***

**மேலும் அதற்கு அறிவிப்பு ரீதியான ஆதாரம்: குர்ஆன், ஹதீஸ் சார்ந்த (நேரடிக்) கூற்றுக்களாகும்.** அவற்றில் நின்றுமுள்ளதுதான் ﴿وَكَلَّمَ اللَّهُ مُوسَى تَكْلِيمًا﴾ (உறுதியாக அழ்ழாஹ் மூஸாவுடன் பேசினான்) எனும் பரிசுத்தமான அவனின் கூற்றாகும். அதாவது: அவன் அவர்களுக்கு பூர்வீகமான, நிரந்தரமான அவனது பேச்சை கேட்கச்செய்தான். அதிலிருந்து மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் விளங்க வேண்டியதை விளங்கிக் கொண்டார்கள். எனவே அழ்ழாஹு தஆலா பேசியது பூர்வீகமானதாகும். மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் இன்னும் அவர்கள் அழ்ழாஹ்வுடைய பேச்சைக் கேட்டதும் (புதிதாகப்) படைக்கப்பட்டதாகும்.

எனவே "குர்ஆன்" (என்பதன்) மூலம் அழ்ழாஹ்வுடைய "தாத்"இற்குத் தரிபாடான பண்பாகிய "பேச்சை" நாடப்படும். மேலும் எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்ட வார்த்தைக்கும் உபயோகிக்கப்படும். அழ்ழாஹு தஆலா ﴿نَزَلَ بِهِ الرُّوحُ الْأَمِينُ عَلَى قَلْبِكَ لِتَكُونَ مِنَ الْمُنْذِرِينَ﴾ ((நீங்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர்களில் நின்றுமாவதற்காக வேண்டி உமது இதயத்தின் மீது (الروح الأمين) "அர்-ரூஹுல் அமீன்" (எனும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்) இதனைக் கொண்டு இறங்கினார்)) என்று கூறியுள்ளான்.

அழ்ழாஹ்வினுடைய "தாத்"இற்கே தரிபட்டதாக இருப்பதனால் (الكلام النفسي) "அல்-கலாமுன் நப்ஸீ" எனப் பெயர் சொல்லப்பட்ட அழ்ழாஹ்வுக்குத் தரிபட்ட பண்பாகிய பேச்சாக அது (அதாவது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலம் முஹம்மத் ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்ட வார்த்தை) இல்லை. எனவே இறக்கப்பட்ட சொல் எனும் பொருளைக்

கொண்ட "குர்ஆன்" என்பதே எழுத்துக்களின் வடிவங்களில் எழுதப்படக்கூடியதும், காதுகளினால் செவிமடுக்கப்படக்கூடியதும், கற்பனை செய்யப்பட்ட சொற்களைக் கொண்டு மனங்களில் மனனமிடப்படக்கூடியதும், சொல் மூலம் வாசிக்கப்படக்கூடியதுமாகும். *(அல்லாஹ்வுடைய ذاتي) "தாதி"ய்யான "பேச்சு" (குர்ஆன்) பிரதிகளில் சங்கமிக்காது. என்றாலும் அவ்விரண்டு விடயங்களுக்கும் (كلام الله) "அல்லாஹ்வின் பேச்சு" என்று உபயோகிக்கப்படும். எனவே (அல்லாஹு தஆலாவுடைய) (نفسية) "நப்ஸிய்யத்"தான பேச்சின் மீது அதனை உபயோகிப்பதைக் கவனிக்கையில் அது حقيقة عقلية شرعية) -"ஹகீகதுன் அக்லிய்யதுன் ஷர்இய்யஹ்") பகுத்தறிவைச் சார்ந்த மார்க்க ரீதியான யதார்த்தமாகும். மேலும் இறக்கப்பட்ட சொல் மீது அதனை உபயோகிப்பதைக் கவனிக்கையில் அது حقيقة شرعية)- "ஹகீகதுன் ஷர்இய்யஹ்") மார்க்க ரீதியான யதார்த்தமாகும். ஏனெனில் இறக்கப்பட்ட சொல்லானது பூர்வீகமான நிரந்தரமான (அல்லாஹ்வின் ذاتي) "தாதி"ய்யான பேச்சேயல்ல.*

*மேலும் அதனை புரிதலுக்கு நெருக்கிவைக்கும் முகமாக "நான் அல்லாஹ் என்று மொழிந்தேன்" அதாவது அல்லாஹு தஆலாவுடைய தூய்மையான "தாதி"ன் மீது அறிவிக்கும் வார்த்தையை நான் மொழிந்தேன் என்று சொல்லப்படவும் இன்னும் "அல்லாஹ் என்று எழுதினேன்" அதாவது பூர்வீகமான "தாதி"ன் மீது அறிவிக்கும் எழுத்துக்களின் வடிவங்களை (எழுதினேன்) என்று சொல்லப்படவும் இன்னும் பலகை மற்றும் அது போன்றதில் எழுதப்பட்ட (அல்லாஹ்*

எனும்) “ஜலாலஹ்” உடைய சொல்லுக்கு “இது அல்லாஹ்” என்று சொல்லப்படவும் இன்னும் “இன்னார் சரியான அழகான முறையில் ஓதினார்” என்று சொல்லப்படவும் இன்னும் “இன்னார் பிழையான முறையில் ஓதினார்” என்று சொல்லப்படவும் முடியும்.

எனவே “நான் அல்லாஹ் என்று மொழிந்தேன்” மேலும் “நான் அல்லாஹ் என்று எழுதினேன்” என்று சொல்பவரின் வார்த்தை பகுத்தறிவு ரீதியான யதார்த்தத்தின் (حقيقة عقلية- ஹகீகதுன் அக்லிய்யஹ்வின்) படி அமைய முடியாது. ஏனெனில் அல்லாஹு தஆலா எமது நாவுகளில் சங்கமிக்கமாட்டான். அவ்வாறே அவனுடைய “தாதி”ய்யான பேச்சும் எமது நாவுகளில் சங்கமிக்கமாட்டாது. மாறாக (அல்லாஹ்வுடைய “தாதி”ற்கு தரிபாடான பேச்சை அறிவிக்கும்) வசனம் மாத்திரமே எமது நாவுகளில் சங்கமித்துக் கொள்கிறது.

எனவே இறக்கப்பட்ட வார்த்தை, அல்லாஹ்வுடைய “தாதி”ய்யான பேச்சாகவே இல்லாதிருப்பின், அது எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது எவ்வாறு இறங்கியிருக்கும்? என்று கேட்கப்பட்டால் (அதற்கான) விடை: நிச்சயமாக ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அதனை “அல்-லவ்ஹுல் மஹ்பூல்” இல் எழுதப்பட்டதாக பெற்றுக் கொண்டு, பின்னர் அவர்கள் அதனை அல்லாஹ்வின் கட்டளைக்கமைய எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஏடுகளில் எழுதப்பட்ட நிலையிலில்லாமல் அவர்களுக்கு ஓதிக்காட்டும் விதத்தில் இறக்கினார்கள் என்று சில அறிஞர்கள் கூறியிருப்பதாகும்.

﴿إِنَّهُ لَقَوْلُ رَسُولٍ كَرِيمٍ﴾ *(நிச்சயமாக இது மிக கண்ணியமான ஒரு தூதரின் கூற்றாகும்)* அதாவது "ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களால் ஓதப்பட்டது" என்ற பரிசுத்தமான அவனின் கூற்று அதற்கு சான்று பகர்கின்றது. எனவே இறக்கப்பட்ட இந்த வார்த்தை அல்லாஹ்வுடைய "தாதி"ய்யான பேச்சாகவே இருக்குமாயின், அல்லாஹு தஆலா ﴿إِنَّهُ لَقَوْلُ رَسُولٍ كَرِيمٍ﴾ *(நிச்சயமாக இது மிக கண்ணியமான ஒரு தூதரின் - அதாவது ஜிப்ரீலின்- கூற்றாகும்)* எனக் கூறியிருக்கமாட்டான். ஏனெனில் ஜிப்ரீல் அவர்களே "மிக கண்ணியமான தூதர்" என்பது கொண்டு நாடப்படுபவராவார்.

முஷப்பிஹாக்கள் ﴿بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ﴾ இலே உள்ள باء பின்னர் سين பின்னர் அதை அடுத்தடுத்து வரும் எழுத்துக்களையும் மற்றும் குர்ஆனுடைய சொற்களில் அவையல்லாததையும் (மொழிவது) மூலம் நாங்கள் பேசுவதைப் போன்று அல்லாஹ்வும் எழுத்துக்களின் மூலம் பேசுகின்றான்" எனக் கூறுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறியதில் அல்லாஹ்வை அவனது படைப்புக்கு ஒப்பாக்குதல் உள்ளது. ஏனெனில் எமது நாவுகளிலிருந்து வெளியாகுவதைப் போன்று அல்லாஹு தஆலாவுடைய "தாதி"லிருந்து வெளிப்படும் எழுத்துக்களைக் கொண்டு அவன் பேசுபவனாக இருந்திருந்தால் அவன் எங்களைப் போன்று இருந்திருப்பான். (ஆனால்) அவன் எங்களைப் போன்று இருப்பது சாத்தியமற்றதாகும். ஏனெனில் அவன் ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ﴾ (எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை) எனும் அவனது கூற்றின் மூலம்

*அவனல்லாதவை அவனுக்கு ஒப்பாகுவதை மறுத்துள்ளான்.*

*(இறைக்) கோட்பாட்டில் அஹ்லுஸ்ஸுன்னஹ் இமாம்கள் சரியானதை விளக்கியிருக்கும் பொருட்டு, அழ்ழாஹு தஆலா அவர்களைப் பொருந்திக் கொள்வானாக. அவர்களின் தெளிவு இல்லாமலிருப்பின் அதிகமானவர்களுக்கு அது தெரியாமலிருந்திருக்கும். மேலும் அவர்கள் அழ்ழாஹு தஆலாவுக்கு சடம் கற்பிப்பதிலும் சிக்கியிருப்பார்கள்.*

*மேலும்* ﴿إِنَّهُ لَقَوْلُ رَسُولٍ كَرِيمٍ ذِى قُوَّةٍ عِنْدَ ذِى الْعَرْشِ مَكِينٍ مُطَاعٍ ثَمَّ أَمِينٍ﴾ *(நிச்சயமாக இது மிக கண்ணியமான ஒரு தூதரின் கூற்றாகும், அவர் மிக சக்தியுடையவர், அர்ஷுக்குரியவனிடம் பெரும் பதவியுடையவர், அங்கு கீழ்ப்படியப்படுபவர், மிக நம்பிக்கைக்குரியவர்) என்ற அழ்ழாஹு தஆலாவுடைய கூற்றைக் கொண்டு எமது ஆதாரமெடுத்தலானது தம் படைப்பாளனை படைப்புகளுக்கு ஒப்பாக்குவதை விட்டும் தூய்மைப்படுத்தும் அஹ்லுஸ்ஸுன்னஹ்கள் கூறக்கூடியது சரி என்பதற்கு மிகத் தெளிவான ஆதாரங்களில் உள்ளதாகும். இதன் பால் அஹ்லுஸ்ஸுன்னஹ்களின் இரு பிரிவினர்களான மாதுரூதிய்யஹ்களும், அஷ்அரிய்யஹ்களும் சென்றுள்ளனர். எனவே “குர்ஆன்” (என்பது) யதார்த்தத்தில் அழ்ழாஹு தஆலாவுடைய பேச்சே என்று அஹ்லுஸ்ஸுன்னஹ்களில் கூறிய சிலரின் கூற்று அவர்கள் (புரிதலுக்கு) சமீபமாக்கி வைத்த தெளிவாக்கலின் மீது வைக்கப்படும்.*

*பின்னர் (இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட ஒவ்வொருவரின் மீதும் அழ்ழாஹ்வின் பண்புகளில் பர்ளு ஐனாக அறிந்திருக்க வேண்டிய கடமையானது இந்த பதின்மூன்றுமாகும். மேலும் "தக்வீன்" என்பது -அது தான் படைக்கப்படுபவற்றையும், நிர்ணயிக்கப்படுபவற்றையும் உருவாக்கல் (எனும் தன்மை)- அதனை அஹ்லுஸ்ஸுன்னஹ்களில் சிலர் அது அழ்ழாஹ்வுக்குரிய பூர்வீகமான அவனது "தாது"க்குத் தரிபாடான பண்பு என்பதாக விளங்கினார்கள். எனவே அவர்களிடத்தில் அழ்ழாஹ்வுடைய "தக்வீன்" பூர்வீகமானதாகும். மேலும் "முகவ்வனாத்" (உருவாக்கத்தினால் ஏற்பட்டவை) புதிதானதும், படைக்கப்பட்டதுமாகும். மற்றப் பிரிவினர் - அஷாஇராக்களில் அதிகமானோர்-தக்வீனை அழ்ழாஹுத் தஆலாவுக்குரிய பூர்வீகமான ஒரு பண்பாகக் கருதமாட்டார்கள். மாறாக தக்வீனை பூர்வீகமான வல்லமையின் பிரதிபலிப்பாகக் கருதுவார்கள். எனவே அவர்களிடம் தக்வீனை பூர்வீகமான பண்பாகக் கணக்கிடுவதற்கு எந்தத் தேவையுமில்லை. எனவே மாதுரீதிய்யஹ்களின் மத்ஹபின் பிரகாரம் (இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட அனைவரும் கட்டாயம் அறிய வேண்டிய பண்புகள் பதினான்காக இருக்கும். மேலும் மாதுரீதிய்யஹ்களில் ஒருவர் –அவர்தான் (بدء الأمالي) "பத்உல் அமாலி" என்ற நூலுக்குரியவர்- அழ்ழாஹ்வுடைய "தாது"க்குரிய பண்புகளில் அவர்களின் மத்ஹபை உறுதிப்படுத்துவதில்*

صفات الذات والأفعال طرا

قديمات مصونات الزوال

*((“தாத்” மற்றும் செயல்களின் பண்புகள் அனைத்தும் பூர்வீகமானவையும், நீங்குவதை விட்டும் பாதுகாக்கப்பட்டவையாகும்)).*

*எனக் கூறியுள்ளார்.*

*மாதுரூதிய்யஹ்கள் அவர்களிடத்தில் இவ்வாறே “தாது”டைய பண்புகளும் -அவை பதின்மூன்றாகும்- மேலும் செயல்களின் பண்புகளும் -அதாவது “தக்வீன்” எனும் உருவாக்கலும், பாக்கியமளித்தலும், அபாக்கியமளித்தலும், மரணிக்கச்செய்வதும், உயிர்ப்பித்தலும்- பூர்வீகமானவையாகும். அதாவது ஆரம்பமற்றவையாகும் என உறுதிப்படுத்துகின்றனர்.*

*மேலும் مصونات الزوال என்ற அவருடைய சொல்லின் பொருள்: அழிந்துவிடாது. (அதாவது) அவை உருவாகி பின்னர் இல்லாது போகும் வஸ்துவாக இல்லை என்பதாகும். எனவே அல்லாஹ்வுடைய பேச்சு படைக்கப்பட்ட சத்தம் என்று நம்புபவர் அவனை அவனுடைய படைப்புகளுக்கு ஒப்பாக்கி, அல்லாஹு தஆலாவுடைய ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ﴾ (எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை) எனும் கூற்றுக்கு மாறுசெய்துவிட்டார்.*

*பின்னர் மக்கள் (அல்லாஹ்வுடைய) பண்புகளின் விடயத்தில் சில பிரிவினர்களாகப் பிரிந்துள்ளனர். ஒரு பிரிவினர்: படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் தூய்மைப்படுத்துவதுடன் பண்புகளைத் தரிபடுத்தினர்.*

*அவர்கள் தான் அஹ்லுஸ்ஸ{ன்னஹ் வல் ஜமாஅத்தினராவர்;. அதாவது உட்காருதல், இடம்பெயரல், திசைகளில் ஒரு திசையில் இடமெடுத்துக் கொள்ளல், பேதகமடைதல், வளர்ச்சியடைதல், படைப்பின் ஏனைய அறிகுறிகள் போன்ற சடத்திற்கு அவசியமானவற்றில் நின்றும் அவனுடைய பண்புகள் ஆகியிருப்பதை விட்டும் பரிசுத்தமான அவனைத் தூய்மைப்படுத்;துவதுடன், அழ்ழாஹ் தனக்கு தரிபடுத்தியதை அவர்கள் அவனுக்கு தரிபடுத்தினார்கள்.*

*மேலும் ஒரு பிரிவினர் (அழ்ழாஹ்வுக்குரிய) பண்புகளை பாலாக்கிவிட்டனர். அவர்களே முஃதஸிலாக்களும் அவர்களே கதரிய்யாக்களுமாவர். அவர்கள் "தாத்"இற்குத் தரிபட்ட பண்புகளைக் கொண்டு அழ்ழாஹ் வர்ணிப்புப்பெற்றவன் என்பதை மறுத்துள்ளனர். எனவே இதனால்தான் அவர்கள் "முஅத்திலாஹ்" என்று பெயர் சூட்டப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் (அழ்ழாஹ்விற்கு நிலைத்திருக்கும்) பண்புகளை பாலாக்கினார்கள். அதாவது அவற்றை மறுத்தார்கள்.*

*மற்றுமொரு பிரிவினர் அழ்ழாஹ்வின் பண்புகளை சடத்திற்கு அவசியமானவற்றில்; நின்றுமாக்கிவிட்டார்கள். (அதாவது) தூய்மையான (அழ்ழாஹ்வின்) "தாத்"இற்கு அசைவு, அமைதி, இடம் பெயர்தல் மற்றும் படைப்பின் ஏனைய அறிகுறிகளைத் தரிபடுத்திவிட்டார்கள். அழ்ழாஹ்வின் பேச்சு உருவாகிப் பின்னர் முடிவடைந்து, மீண்டும் உருவாகிப் பின்னர் முடிவடைந்து, மீண்டும் உருவாகிப் பின்னர்*

*முடிவடையும் சத்தங்களும், எழுத்துக்களுமாகும் எனும் அவர்களின் கூற்றைப் போன்று. இவர்களுக்கே முஷப்பிஹாக்கள் (ஒப்பாக்குபவர்கள்) என்றும் முஜஸ்ஸிமாக்கள் (சடம்கற்பிப்பவர்கள்) என்றும் பெயர் சொல்லப்படும்.*

*அவர்களில் ஒரு வகையினர் அல்லாஹ்வுக்கு* (جسم) *"ஜிஸ்ம்" (சடம்) எனப் பெயர் சொல்வதைத் தெளிவாகவே கூறி, பின்பு (("அவன் ஒரு சடம்" என்று நாம் சொல்வதன் மூலம் அவன் ஒரு பெறுமானம் என நாங்கள் நாடவில்லை மாறாக அவன் நிலைத்தவனாக உள்ளான் என்பதையே நாடுகின்றோம்)) எனக் கூறுகின்றனர்.*

*மற்றுமொரு வகையினர் சடம் என்ற வார்த்தையை -அதன் அர்த்தத்தை உறுதி கொண்டிருப்பதுடன்- அவன் மீது உபயோகிப்பதைத் தவிர்ந்து கொள்கின்றனர்.*

*அவர்களில் நின்றுமுள்ளவர்கள்தான்* (كرامية) *"கர்ராமிய்யாக்கள்." இவர்கள் முஹம்மதுப்னு கர்ராம் என்று சொல்லப்படும் ஒருவரளவில் இணைந்து கொள்ளக்கூடிய முஷப்பிஹாக்களும், முஜஸ்ஸிமாக்களுமாவார்கள். (அதாவது ஒப்பாக்கக்கூடியவர்களும், சடம்கற்பிப்பவர்களும்) மேலும் இவர்களுக்கு* (حشوية) *"ஹஷவிய்யாக்கள்" என்றும் சொல்லப்படும்.*

*அஹ்லுஸ்ஸுன்னஹ்கள் (முஜஸ்ஸிமஹ், முஅத்திலஹ் ஆகிய) அவ்விரண்டு கூட்டத்துக்கும் மத்தியில் நடுநிலை வகிப்பவர்கள். அவர்கள் "அஷ்அரிய்யஹ்", "மாதுரீதிய்யஹ்" என*

*பட்டம்சூட்டப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் நேர்வழியின் இரு இமாம்களான அபுல்ஹஸன் அல்-அஷ்அரி, அபூ மன்ஸூர் அல்-மாதுரீதீ (றஹிமஹுமல்லாஹ்) ஆகியவர்களைப் பின்பற்றுகின்றனர். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட அறிவு, வல்லமை, நாட்டம், கேட்டல், பார்த்தல், பேச்சு, மரணமின்மை, படைப்புகளுக்கு மாற்றமாக இருத்தல், தன்னிலே நிலைத்திருத்தல், உள்ளமை, தனித்திருத்தல், பூர்வீகம், முடிவின்மை ஆகிய இப்பண்புகளில் இவை "பூர்வீகமானவை நிரந்தரமானவை" என்று இவர்கள் கூறுவதன் மூலம் படைப்பின் பண்புகளை விட்டும் அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்துவதுடன் இப்பண்புகளை அல்லாஹு தஆலாவுக்கு தரிபடுத்துகிறார்கள் என்பதாலும், மேலும் அவர்கள் பல கருத்துகளுக்கு இடம்பாடான பண்புகளின் வசனங்களையும் மற்றும் பண்புகளின் ஹதீஸ்களையும் வெளிரங்கத்தின் மீது அவற்றை சுமத்தாட்டுவதை விட்டுவிட்டு, அவற்றிற்கு வலிந்துரையும் (அதாவது تأويل "தஃவீல்") செய்கிறார்கள் என்பதாலும்; அவர்கள் "முஅத்திலா"க்கள் மற்றும் "முஷப்பிஹா"க்களை விட்டும் தனித்துவம் பெறுகின்றார்கள். எனவே அவர்களில் சுருக்கமான அமைப்பில் வலிந்துரை செய்பவர்களுமுள்ளனர் மற்றும் அவர்களில் விரிவான அமைப்பில் வலிந்துரை செய்பவர்களுமுள்ளனர். அவ்விரு விடயங்களையுமே அவர்கள் உண்மையானதாகவும் சரியானதாகவும் கருதுகின்றனர்.*

*அதற்கு உதாரணம் பல வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அர்ஷின் மீது அல்லாஹ்வின் இஸ்திவாவை பரிசுத்தமான அவனுக்குத் தகுதியான*

அர்த்தத்தில் அவர்கள் சுமத்தாட்டுவதாகும். படைப்பின் இஸ்திவாவில் நின்றும் அறபுப் பாஷையில் இஸ்திவாவுக்குரிய அர்த்தங்களில் உட்காருதல், தரிபடுதல் அல்லது நேர்படுதல் அல்லது அது போன்ற அர்த்தத்திலல்ல. அவை போன்றதன் மீது சுமத்தாட்டாமல் அழ்ழாஹு தஆலாவுக்குத் தகுதியான அர்த்தத்தின் மீது சுமத்துகிறார்கள். பின்னர் அவர்களில் ஆக்கிரமித்தல், அடக்கியாழுதல் போன்ற அழ்ழாஹு தஆலாவுக்குத் தகுதியான அர்த்தத்தை குறிப்பாக்காமல் அவை வந்தது போன்று அவற்றை நடத்தாட்டுவதன் மூலம் போதுமாக்கிக் கொண்டோருமுள்ளனர்.

அவர்களில் சிலர் புதிதாக உண்டானதற்குரிய அறிகுறிகளும் மற்றும் சடத்தன்மையை கட்டாயப்படுத்துபவையும் அவசியமாகாத ஒரு கருத்தை குறிப்பாக்குகின்றனர். எனவே அவர்களில் முதற் பிரிவினர் சுருக்கமான அமைப்பில் வலிந்துரை செய்தனர். மேலும் மற்றப் பிரிவினர் விரிவான அமைப்பில் வலிந்துரை செய்தனர்.

ஒப்புவமை செய்பவர்கள் சத்தியத்தை விட்டும் வழிதவறிவிட்டார்கள். அவர்கள் "வலிந்துரையானது பாலாக்குவதாகும்" என்று கூறியிருக்கிறார்கள். இது அஹ்லுஸ்ஸ{ன்னஹ்கள் மீது அவதூறாகும். மேலும் இவர்கள் சத்தியவான்களை மேற்குறிப்பிடப்பட்ட "இஸ்திவா"வின் வசனத்தைப் போன்ற பல பொருள்களுக்கு இடம்பாடான அவ்வசனங்கள் மற்றும் ஹதீஸ்களை அதன் வெளிரங்கங்களின் மீது சுமத்தாட்டுவதை அவர்கள் விட்டதனால் பழிக்கின்றனர். எனவே அவர்களில் ஒருவர்

அவ்வசனங்களையும், ஹதீஸ்களையும் அவற்றின் வெளிரங்கங்களின் மீது சுமத்தாட்டாத ஒரு ஸுன்னியிற்கு "இவர் வலிந்துரை செய்பவர்" என்று (அவரை) பழிக்கும் விதத்தில் கூறுகிறார். அத்துடன் அவர்களுமோ இவ்வசனங்கள் மற்றும் ஹதீஸ்களில் சிலதுக்கு வலிந்துரை செய்கிறார்கள். எனவே அவர்கள் யதார்த்தத்தில் தமக்குத் தாமே முரண்பட்டவர்களாவர். அதனை அவர்கள் உணராமலிருந்த போதிலும் சரியே. ஏனெனில் அவர்கள் எவ்வசனங்களின் வெளிரங்கங்கள் அழ்ழாஹ் மேல் திசைக்கு எதிரான திசையில் -(அதாவது) பூமி போன்று உள்ளான் என்றுள்ளதோ அவற்றை வெளிரங்கங்களின் மீது சுமத்தாட்டமாட்டார்கள்.

எனவே அவர்கள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய விடயத்தில் ﴿وَقَالَ إِنِّي ذَاهِبٌ إِلَىٰ رَبِّي سَيَهْدِينِ﴾ (நிச்சயமாக நான் என் இரட்சகனின் பால் செல்கிறேன், அவன் எனக்கு நேர்வழிகாண்பிப்பான் எனக் கூறினார்) என்ற பரிசுத்தமான அவனின் கூற்று போன்ற இவ்வசனங்களின் பால் வந்தால் இவ்வசனத்தின் மூலம் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹிஜ்ரத் செய்த ஷாமுடைய பூமியில் அழ்ழாஹ் இருக்கின்றான் என்பதையே அவன் நாடியுள்ளான் என்பதன் மீது அதனை சுமத்தாட்டமாட்டார்கள். அவ்வாறே ﴿وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنْتُمْ﴾ என்ற பரிசுத்தமான அவனின் கூற்றின் பால் அவர்கள் வந்தாலும் இவ்வசனத்தையும் அதன் வெளிரங்கத்தில் சுமத்தாட்டமாட்டார்கள். ஏனெனில் அதன் வெளிரங்கம் அழ்ழாஹ் அவனது அடியார்கள் பூமியில் எங்கிருந்த போதிலும் அவர்கள் இருக்கும் இடத்தில் அவர்களுடன் கலந்து மேலும் அவன் அவர்களுடன் இடம்பெயர்கின்றான் என்பதாகும்.

பின்னர் "அர்ஷின் மீது இஸ்திவா"வுடைய வசனம் போன்ற இந்த வசனங்களில் சிலதை அவற்றின் வெளிரங்கங்களின் மீது நீங்கள் சுமத்துவதும் மேலும் ﴿وَقَالَ إِنِّي ذَاهِبٌ إِلَىٰ رَبِّي سَيَهْدِينِ﴾ (நிச்சயமாக நான் என் இரட்சகனின் பால் செல்கிறேன், அவன் எனக்கு நேர்வழிகாண்பிப்பான் எனக் கூறினார்) என்ற வசனம் மற்றும் ﴿وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيدِ﴾ என்ற வசனம் மற்றும் அவற்றிற்கு ஒப்பானது போன்ற வேறு வசனங்களை அதன் வெளிரங்கங்கள் மீது சுமத்தாமலிருப்பதும் எவ்வாறு? அது ஆதாரமற்ற கூற்றல்லவா? என்று அவர்களிடம் கேட்கப்பட்டால்? எந்த வசனங்களின் வெளிரங்கங்கள் அழ்ழாஹு தஆலா அர்ஷ், வானம் போன்ற மேல் திசையில் உள்ளான் என்றுள்ளதோ அவற்றை அதன் வெளிரங்கங்கள் மீது நாம் சுமத்தாட்டினால் அழ்ழாஹ்வுக்கு பரிபூரணத்தையே நாம் தரிபடுத்திவிட்டோம். எனினும் எந்த வசனங்களின் வெளிரங்கங்கள் பரிசுத்தமான அவன் கீழ் திசையில் உள்ளான் என்றுள்ளதோ அவற்றை அதன் வெளிரங்கள் மீது நாம் சுமத்தாட்டமாட்டோம். ஏனெனில் கீழ் திசையானது பரிபூரணத்துக்கு மாற்றமானதாகும். அது அழ்ழாஹு தஆலாவுடைய விடயத்தில் குறையாகும்." என்று கூறுவார்கள்.

சத்தியவான்கள் கூறுகிறார்கள்: "திசை உயர்விலே கண்ணியம் கிடையாது. மாற்றமாக அந்தஸ்து உயர்விலேதான் கண்ணியமிருக்கின்றது. "மேல்" என்பது அறபுமொழியில் இடம் மற்றும் திசையின் உயர்வு இன்னும் அந்தஸ்தின் உயர்வு ஆகிய இரு அர்த்தங்களின் பிரகாரம் வரும்.

*பிர்அவ்னைத் தொட்டும் அழ்ழாஹ் அறிவிக்கையில் ﴿وَإِنَّا فَوْقَهُمْ قَاهِرُونَ﴾ (நிச்சயமாக நாம் அவர்களுக்கு மேலால் ஆதிக்கம் செய்யக்கூடியவர்கள்) அதாவது "நாம் பலத்தாலும் ஆதிக்கத்தாலும் அவர்களுக்கு மேலால் இருக்கின்றோம்." எனக் கூறியுள்ளான். ஏனெனில் இதன் மூலம் பிர்அவ்ன் பனூ இஸ்றாஈல்களின் பிடறிகளுக்கு மேலால் இருக்கின்றான் என்பதையே நாடினான் எனக் கூற முடியாது. (மாறாக) அவர்கள் தன்னால் ஆதிக்கம் செய்யப்பட்டவர்களும், மிகைக்கப்பட்டவர்களுமாவார்கள் என்பதையே அவன் நாடினான். சுருக்கமென்னவெனில் இக்கூட்டம் அவர்கள்; சொல்வதை அவர்களே அறியாதவர்களைப் போல் உள்ளார்கள்.*

*அழ்ழாஹ் மேல் திசையில் இடமெடுத்துக்கொள்வதை யூகிக்கச்செய்யும் மற்றும் அவன் கீழ் திசையில் இடமெடுத்துக்கொள்வதை யூகிக்கச்செய்யும் அவ்வசனங்களை வெளிரங்கங்கள் மீது சுமத்தாட்டாத சத்தியவான்கள் ஆதாரமில்லாத வாதத்தை தவிர்ந்து கொண்டனர். ஆனால் அந்த வசனங்கள் மற்றும் ஹதீஸ்களில் சிலதை அதன் வெளிரங்கங்கள் மீது சுமத்தாட்டி, அவற்றின் சிலதை அவற்றின் வெளிரங்கத்தின் மீது சுமத்தாட்டுவதை விட்டுவிடும் கூட்டம் ஆதாரமற்ற வாதம்புரிந்தனர். மேலும் (அழ்ழாஹ்வை) ஒப்பாக்குவதும் அவர்களைப் பற்றிப்பிடித்துக்கொண்டது. எனவே அவர்கள் யதார்த்தத்தில் முஷப்பிஹாக்களாவர். இந்தப் பெயரை அவர்கள் தங்களுக்குப் பொருந்திக் கொள்ளாவிட்டாலும் சரியே.*

அவர்களின் வழக்கத்தில் நின்றுமுள்ளதே (بلا كيف) "விதமின்றி" அர்ஷின் மீது "இஸ்திவா" ஆனான் எனும் அவர்களின் கூற்றின் மூலம் அல்லது (على ما يليق به) "அவனுக்குத் தகுதியான பிரகாரம்" எனும் அவர்களின் கூற்றின் மூலம் ஸலபுகள் மறுத்த (كيف) "கைபை" -விதத்தை- அவர்கள் அழ்ழாஹ்வினுடைய விடயத்தில் உறுதிகொண்டிருப்பதுடன் மக்கள் மீது மாயையை உண்டுபண்ணுவதாகும். புத்தியுள்ளவர்கள் அவர்களின் மாயக்கருத்துக்களை விட்டும் எச்சரிக்கையாக இருந்து கொள்ளட்டும். அவர்கள் கூறுபவற்றை விட்டும் அழ்ழாஹ் பரிசுத்தமாகிவிட்டான்.

# அழ்ழாஹ்வின் பண்புகள் அனைத்தும் பரிபூரணமானவையே

*அழ்ழாஹ்வின் பண்புகள் பூர்வீகமான நிரந்தரமானவை (அதாவது ஆரம்பம் முடிவுவற்றவை.) ஏனெனில் (அவனுடைய) "தாத்" பூர்வீகமானதாகும். எனவே பூர்வீகத்திலில்லாத எந்தப்பண்பும் அவனுக்கு (புதிதாக) ஏற்படாது. படைப்புகளின் பண்புகள் அவை பூரணத்திலிருந்து பரிபூரணமளவில் முன்னேற்றமடைவதை ஏற்றுக்கொள்ளும் பண்புகளேயாகும். ஆக அழ்ழாஹு தஆலாவின் அறிவிலே எதுவும் புதிதாக ஏற்படமாட்டாது. அழ்ழாஹு தஆலா அனைத்தையும் அவனது பூர்வீகமான அறிவு மேலும் பூர்வீகமான அவனது வல்லமை இன்னும் பூர்வீகமான அவனது நாட்டத்தைக் கொண்டு படைத்தான். எனவே அழ்ழாஹ்வுடன் தொடர்புபடுத்துகையில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை அவனுடைய பூர்வீகமான அறிவின் மூலம் சூழ்ந்துகொண்டான். அழ்ழாஹ்வுடைய "தாது"க்கு பூர்வீகம் தரிபட்டிருப்பதால் அவனது அனைத்துப் பண்புகளும் மாற்றமடைவதையும், வளர்ச்சியடைவதையும் ஏற்றுக்கொள்ளாத பூர்வீகமான, நிரந்தரமானவையாக இருப்பது அவசியமாகும். ஏனெனில் மாற்றமடைவதும், ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு வளர்ச்சியடைவதும், புதிதாக உருவானதற்குரிய அடையாளமாகும். எனவேதான் மனிதன் அதிகரிப்பு, குறைவு, பூரணத்திலிருந்து குறைவின் பால் மாற்றம், மற்றும் அதற்கு*

*எதிர்மறையையும் ஏற்றுக்கொள்கின்றான். அல்லாஹு தஆலாவோ அதிகரிக்கவோ, குறைவடையவோ மாட்டான். எனவே அல்லாஹ்வின் பண்புகள் பூரணத்திலிருந்து பரிபூரணமளவில் வளர்ச்சியடைவதை ஏற்காது. அல்லாஹ்வின் அறிவு அதிகரிக்கவோ, குறைவடையவோ மாட்டாது. மாறாக அவனுடைய அறிவு ஏனைய அவனது பண்புகள் போலவே பரிபூரணமானதாகும். அதன் மூலமே அனைத்தையும் அவன் அறிவான். ஆகையால் புதிய அறிவு அவனுக்கு உண்டாகாது. மாறாக அவன் பூர்வீகத்திலே அனைத்தையும் அறிந்தவன். எனவே மாற்றமென்பது புதிதாக அறியப்பட்டவையிலேயே ஏற்படும். பூர்வீகமான அல்லாஹ்வின் அறிவிலல்ல. எனவே அல்லாஹ் இறந்தகாலத்தில் நடைபெற்றதையும், நிகழ்காலத்தில் நடைபெறுவதையும், எதிர்காலத்தில் நடைபெறக்கூடியவற்றையும் அவன் அறிவான். மறுமையில் புதிதாக ஏற்படும் விடயங்கள் உட்பட அவற்றையும் பூர்வீகத்திலே அவன் அறிந்துள்ளான். சுவர்க்க நரகவாசிகளின் துண்டிப்பில்லாமல் புதிதாக உருவாகும் மூச்சுகள் உட்பட அவற்றையும் அவன் விரிவாக அறிவான்.*

﴿وَلِلَّهِ الْأَسْمَاءُ الْحُسْنَى فَادْعُوهُ بِهَا وَذَرُوا الَّذِينَ يُلْحِدُونَ فِي أَسْمَائِهِ﴾

*(அல்லாஹ்வுக்கு மிக அழகிய பெயர்கள் உள்ளன. ஆகவே அவற்றின் மூலமே நீங்கள் அவனை அழையுங்கள். அவனது பெயர்களில் (தவறான பொருள் கொண்டு) திரித்துக் கூறுவோரை விட்டுவிடுங்கள்) என்ற அல்லாஹ்வின் கூற்றின் அர்த்தமாகிறது: நிச்சயமாக அல்லாஹு தஆலா அவனுக்கு பரிபூரணத்தை அறிவிக்கும் நாமங்கள் உள்ளன என்பதாகும்.*

*எனவே அழ்ழாஹ் பூரண பண்பைக் கொண்டே வர்ணிக்கப்படுவான். நாமங்களில் எவை பூரணத்தின் மீது அறிவிக்காதோ அவை அவனுடைய நாமமாக இருக்கமுடியாது. மனிதர்களில் சிலர் அவனுக்கு ''ரூஹ்'' என்பதாகப் பெயர் சொல்கின்றனர். இதுவுமோ ஆகுமானதல்ல.*

*அழ்ழாஹ்வுடைய மிக அழகிய நாமங்கள் அவற்றிற்கு* (**صفات الله**) *''அழ்ழாஹ்வின் பண்புகள்'' என்று உபயோகிக்கப்படும். (அவ்வாறே) அவற்றிற்கு* (**أسماء الله**) *''அழ்ழாஹ்வின் நாமங்கள்'' என்றும் உபயோகிக்கப்படும். (அழ்ழாஹ் எனும்) ஜலாலஹ்வுடைய வார்த்தையைத் தவிர. அதற்கு* (**صفة**) *''பண்பு'' என பிரயோகிக்கப்படமாட்டாது.*

*பின்னர் அழ்ழாஹு தஆலாவின் நாமங்கள் அவனல்லாதோருக்கு பெயராக வைக்க முடியாத வகை மற்றும் அவனல்லாதோருக்கு பெயராக வைக்க முடியுமான வகை என இரு வகைப்படும்.*

**الله، الرحمن ، القدوس ، الخالق ، الرزاق ، مالك الملك ، ذو الجلال والإكرام**
**المميت ، المحيي ،** *ஆகியன கொண்டு அழ்ழாஹ்வுக்கு மாத்திரமே பெயர்கூற முடியும்.*

*(அழ்ழாஹ்வின்) நாமங்களில் அதிகமானதை அழ்ழாஹ் அல்லாதோருக்கும் பெயராகக் கூற முடியும். ஒருவர் தன் மகனுக்கு ''றஹீம்'' என்றும் அவ்வாறே ''மலிக்'' அவ்வாறே ''ஸலாம்'' என்றும் பெயர்வைக்க முடியும்.*

## அல்-அகீததுல் முர்ஷிதஹ்

### அல்-இமாம் பக்ருத் தீன் இப்னு அஸாகிர் ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்:

((அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் எங்களுக்கும், உங்களுக்கும் நேர்வழியைக் காட்டுவானாக... (இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட அனைவர் மீதும் பின்வருவனவற்றை அறிவது கடமையாகும். அல்லாஹு தஆலா அவனுடைய ஆட்சியில் தனித்தவன், அனைத்து பிரபஞ்சத்தையும், மேலோகம், கீழோகம், அர்ஷ், குர்ஸீ, வானங்கள், பூமிகள், அவற்றில் உள்ளவை மற்றும் அவற்றுக்கு இடைப்பட்டவை ஆகிய அனைத்தையும் அவன் படைத்தான். அனைத்துப் படைப்பினங்களும் அவனுடைய வல்லமையின் மூலம் ஆதிக்கம் செலுத்தப்பட்டவையாகும். அவனுடைய கட்டளையின்றி அணுவும் அசையாது. படைத்தலில் அவனுடன் எந்தவொரு நிர்ணயிப்பாளனும் இல்லை. மேலும் ஆட்சி புரிவதில் அவனுக்கு எந்தவொரு இணையாளனும் இல்லை. அவன் மரணமில்லாதவன், தேவையற்றவன், தூக்கக் கலக்கமோ, தூக்கமோ அவனை அண்டாது. இரகசியத்தையும், பரகசியத்தையும் அறிந்தவன், வானம் பூமியிலுள்ள எந்தவொன்றும் அவனுக்கு மறைந்ததாக இல்லை. தரை, கடலிலுள்ளவை அனைத்தையும் பற்றி நன்கறிந்தவன். ஒரு இலை கூட அவன் அதனை அறியாமல் தரையை அண்டாது. இருள் சூழ்ந்த பூமிக்கு அடியில் உள்ள விதை முதற்கொண்டு ஈரமான, காய்ந்த அனைத்துமே தெளிவான ஏட்டிலே (லவ்ஹுல் மஹ்பூழிலே) உள்ளதாகும். அவன் அனைத்து

*விடயங்களையும் பற்றி சூழ்ந்தறிந்தவன், அனைத்தையும் எண்ணிக்கையால் மட்டிட்டு அறிந்தவன். நாடியதை செய்பவன். அவன் நாடியவற்றின் மீது வல்லமையுடையவன். அரசாட்சி, (பிற பொருளின் பால்) தேவையற்றிருத்தல் அவனுக்கேயுரியதாகும். சர்வ வல்லமையும், அந்தமில்லா தன்மையும், தீர்ப்புச் செய்வதும், முடிவு எடுப்பதும் அவனுக்கேயுரியதாகும். பரிபூரணத்தை அறிவிக்கும் நாமங்கள் அவனுக்குள்ளன. அவன் நிர்ணயித்தவற்றையும், அவன் கொடுப்பவற்றையும் தடுக்கக் கூடியவன் எவனும் கிடையாது. அவனுடைய ஆட்சியில் அவன் நாடியதைச் செய்வான். அவன் நாடிய பிரகாரம் படைப்பினங்களுக்கு அவன் சட்டமும் பிறப்பிப்பான். அவன் பிரதிபலனை எதிர்பார்ப்பவனுமல்ல, தண்டனைக்கு அஞ்சுபவனுமல்ல. அவனுக்கு கடமைகள் என்று எதுவுமே கிடையாது. அவனுக்கு எதிராக எந்தத் தீர்ப்பும் கிடையாது. அனைத்து நிஃமத்களும் அவனிடமிருந்தான அருளாகும், அனைத்து தண்டனைகளும் அவன் வழங்கும் நீதியாகும். அவன் செய்பவற்றைப் பற்றி அவன் கேள்வி கேட்கப்படமாட்டான். மாறாக படைப்பினங்களே கேட்கப்படுவார்கள். படைப்புகளுக்கு முன்பே அவன் உள்ளான். அவனுக்கு முற்காலம், பிற்காலம், மேல், கீழ், வலது, இடது, முன்னால், பின்னால், அனைத்து மற்றும் சிலது என்று எதுவும் கிடையாது. மேலும் "எப்போது இருந்தான்? எங்கு இருந்தான்? எவ்வாறு இருந்தான்?" என்று கேட்கப்படமாட்டாது. அவனுக்கு இடமெதுவுமில்லை. அவனே இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்கியவன், காலங்களை நிர்ணயித்தவன். காலத்தால் அவன் மட்டுப்*

*பெறமாட்டான், ஒரு இடத்தைக் கொண்டு குறிப்புப் பெறமாட்டான். ஒரு கருமம் மற்றொரு கருமத்தை விட்டும் அவனை பராக்காக்கமாட்டாது. யூகம் அவனை எத்திக்கொள்ளமாட்டாது. எந்தப் பகுத்தறிவும் அவனை சூழ்ந்தறியமாட்டாது. சிந்தையில் அவன் குறிப்பானவனில்லை, மனதில் உவமை பெறமாட்டான். யூகத்தில் தோற்றம் பெறமாட்டான், புத்தியில் விதம் பெறமாட்டான். யூகங்களாலும், சிந்தனைகளாலும் அவனை அடைந்துகொள்ள முடியாது. அவன் எவ்விதத்திலும் எதற்கும் ஒப்பாக மாட்டான், மேலும் அவன் (யாவற்றையும்) கேட்கக்கூடியவனாகவும், பார்க்கக் கூடியவனாகவும் உள்ளான்))*

*முற்றும்...*

## அல்-அல்லாமஹ் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தனது மன்ஹஜ் பற்றி பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்கள்

“நாங்கள் முஸ்லிம்களைச் சேர்ந்தவர்களே. நாம் புதுமையான ஒரு பாதையையோ அல்லது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட நவீன சிந்தனைகளையோ அல்லது சுமார் 200 வருடங்களுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட நவீன சிந்தனைகளையோ அல்லது 600 வருடங்களுக்கு முன்னதாக உருவாக்கப்பட்ட நவீன சிந்தனைகளையோ பின்பற்றுபவர்களல்ல.

நமது பாதையானது, பல நூறு மில்லியன் முஸ்லிம்கள் பின்பற்றி வரும் பாதையாகும். நம்பிக்கைக் கோட்பாடுகளில் அஷ்அரிய்யஹ்களாகவும், - இது பல நூறு மில்லியன் முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாடாகும்- வணக்க வழிபாடுகளில் ஷாபிஇய்யஹ்களாகவும் இருக்கிறோம். இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் ஸஹாபாக்கள் மற்றும் தாபிஊன்களின் நம்பிக்கைக் கோட்பாட்டை ஒன்று திரட்டி, தொகுத்தளித்த அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅஹ்வின் பெரும் இமாமாகும். இவர்கள் ஹிஜ்ரீ மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், ஹிஜ்ரீ நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் வபாத்தானவர்களுமாகும். இவர்கள் குர்ஆன், ஹதீஸ் மற்றும் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களைத்தவிர வேறு எதனையும் கொண்டு வரவில்லை. ஷாபிஈ மத்ஹபானது அதற்கு 1200 வருடங்கள் சென்றுவிட்டன.

அரச அதிகாரிகள் அரச யாப்புகளை முன்வைத்து தீர்ப்புச் செய்வதனால் அவர்களை படுகொலை செய்வதை நாம் ஆகுமாக்குவோரல்ல. அவர்களை விட்டும் முற்றிலும் நாம் நீங்கியவர்களே!.

குப்ரில் வீழ்த்திவிடும் வார்த்தைகளைத் தெளிவுபடுத்துவதில் நாம் ஒன்றும் புதிய பாதையொன்றை வகுக்கவில்லை. நாற்பெரும் மத்ஹபுகளைச் சார்ந்த அறிஞர்களையே இவ்விடயத்தில் நாம் பின்பற்றுகின்றோம். இது தொடர்பாக அல்-ஹாபிழ் முர்தழா அஸ்ஸபீதீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் "இஹ்யாஉ உலூமித்தீன்" என்ற கிரந்தத்தின் விரிவுரையில் "நான்கு மத்ஹபுகளைச் சேர்ந்த இமாம்கள், குப்ரை ஏற்படுத்தும் வார்த்தைகளை தெளிவுசெய்து தொகுத்துள்ளனர்" எனக் கூறியுள்ளார்கள்.

பண உதவிக்காக நாம் எந்தவொரு நாட்டுக்கும் வசப்பட்டவர்களல்ல. அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

மேற்குறித்ததல்லாத ஒன்றை யார் எங்கள் பக்கம் இணைப்பாரோ அல்லாஹ்வே அவரை விசாரணை செய்யப் போதுமானவன்."

## பொருளடக்கம்

முன்னுரை……………………………………………03

இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம் ………………..05

**(அல்லாஹ்வின்) முதலாவது பண்பு:**
உள்ளமை..........................................................23
**இரண்டாவது பண்பு:**
பூர்வீகம் ………………………………………32
**மூன்றாவது பண்பு:**
(البقاء) “அல்-பகாஉ” நிரந்தரம் (முடிவின்மை) ……37
**நான்காவது பண்பு:**
(இணையின்றித்) தனித்திருத்தல்……………………39
**ஐந்தாவது பண்பு:**
தன்னிலே நிலைத்திருத்தல் (பிறரின் பால் தேவைகாணாதிருத்தல்)……………………………41
**ஆறாவது பண்பு:**
அவன் படைப்புகளுக்கு மாற்றமாயிருத்தல்……….43
**ஏழாவது பண்பு:**
மரணமில்லாதிருத்தல்………………………...46
**எட்டாவது பண்பு:**
வல்லமை………………………………………..48
**ஒன்பதாவது பண்பு:**
நாட்டம்……………………………………….....50
**பத்தாவது பண்பு:**
அறிவு…………………………………...…….52
**பதினொராவது பண்பு:**
கேட்டல்…………………………………...….57

**பன்னிரெண்டாவது பண்பு:**

பார்வை..........................................60

**பதின்மூன்றாவது பண்பு:**

பேச்சு..........................................62

அழ்ழாஹ்வின் பண்புகள் அனைத்தும் பரிபூரணமானவையே..........................................78

அல்-அகீததுல் முர்ஷிதஹ்..........................................81

அல்-அல்லாமஹ் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் மன்ஹஜ்..........................................84

பொருளடக்கம்..........................................86